விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி 09 | புதன்கிழமை (26.10.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 311

ராம்கோ
MADRAS CEMENTS LTD
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
RAMCO CEMENT
சீமெந்து

# பிரதமர் பதவி கிடைப்பதை தடுக்க கட்சிக்குள் பாரிய சதி

## தம்பி அநுரா. அக்காவுக்கு உருக்கமான கடிதம்



(கொழும்பு)

பிரதமர் பதவிக்கு தனக்குப்பதிலாக வேறொருவரை நியமிப்பதற்கான பாரிய சதியொன்று இடம் பெற்று வருவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரும் வெளிவிவகார அமைச்சருமான அநுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

தனது அக்காவான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு நேற்று எழுதியுள்ள உருக்கமான கடிதமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் பதவியில் ஆசையிருந்தால் மகிந்தவை முழுமையாக ஆதரியுங்கள்

### அநுராவுக்கு பிரதியமைச்சர் நிர்மல கடிதம்

(கொழும்பு)

பிரதமராகும் ஆசையிருந்தால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கவும். இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்காவுக்கு பிரதியமைச்சரும் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான நிர்மல கொத்தலாவல எழுத்திய கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உத்தியோகபூர்வ ஜனாதிபதி வேட்பாளரான மகிந்தவுக்கு எதிராக ஊடகங்கள் மூலமாக நீங்கள் கருத்து தெரிவித்து வருவது வருந்தத்தக்கது.

கடந்த காலங்களில் நீங்கள் எப்படியெல்லாம் கட்சிகளை மாற்றிக்கொண்டு இருந்தீர்கள் என்பதை மக்கள் மறந்து விடவில்லை.

நீங்கள் இந்த நாட்டின் அடுத்த பிரதமராக பொறுப்பேற்க விரும்பினால் மகிந்தவின் வெற்றிக்கு முழுமையாக பொறுப்புணர்வோடு பாடுபட வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியை காப்பாற்றுவதில் ஜனாதிபதி சந்திரிகாவை விட மகிந்த உறுதியாக நிற்பார் அவருக்கு பின்னால் திரண்டிருக்கும் முற்போக்குசக்திகள் (12 ஆம் பக்கம் பார்க்க)


## ஒற்றை லைற் உடன் வந்த ரைக்டர் மோதி குடும்பஸ்தர் பலி

(சாவகச்சேரி)

வரணி-இயற்றாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற உழவு இயந்திரம் -மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் வரணி இயற்றாலையைச் சேர்ந்த 3பிள்ளைகளின் தந்தையான சிதம்பரப்பிள்ளை யசோரஞ்சன் (கண்ணன்) (வயது 35) என்பவரே உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப குடும்பஸ்தர் இரவு 7.30அளவில் தனது வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தபோது எதிரே ஒரு பக்க வெளிச்சத்துடன் வந்துகொண்டிருந்த உழவு இயந்திரம் அவரை மோதியதால் சம்பவ இடத்திலேயே (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் நாட்டில் கடும் வெள்ளப்பெருக்கு



(சென்னை)

தமிழ் நாட்டில் கடந்த 15 தினங்களாக இடிமின்னலுடன் பலத்த மழை பெய்து வருகின்றது. நேற்றுவரை பெய்த மழை காரணமாக காவேரியில் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் காவேரிக்கரையோர கிராமங்களில் உள்ள சுமார் 15 ஆயிரம் வீடுகள் தண்ணீரில் மூழ்கிவிட்டன. வெள்ள அபாயம் ஏற்பட்டவுடன் காவேரிக்கரைகளில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் போர்க்கால அடிப்படையில் வெளியேற்றப்பட்டனர். அவர்கள் மண்டபங்கள், பள்ளிக்கூடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வெள்ள அபாயம் நீடிப்பதால் அவர்களது இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. சுமார் 10 இலட்சம் பேர் இத்தகைய பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள்.

1961 ஆம் ஆண்டுக்கு பின்னர் காவேரி கரையோர மக்கள் இந்தஆண்டே ஆர்ப்பரித்துச் செல்லும் வெள்ளத்தைக்கண்டுள்ளனர். கரையோரங்களில் கட்டப்பட்டிருந்த சுமார் 5 ஆயிரம் குடிசைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. வெள்ளத்தால் இதுவரை தமிழ் நாடுமுழுவதும் 60 பேர் பலியாகியுள்ளனர். (ந)

## புலிகளின் பகுதிகளில் தேர்தல் நடத்தாவிடில் அப்பகுதி இலங்கைக்கு சொந்தமற்றதாகும்

### முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் அரச கட்டுப்பாடற்ற விடுதலைப் புலிகளின் பகுதியில் உள்ள மக்கள் தமது வாக்குகளை சுதந்திரமாக பதிவு செய்வதை உறுதிசெய்ய வேண்டுமென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கேட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அரச கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள வாக்காளர்கள் சுதந்திரமாக வாக்களிப்பதற்கு தடையாகவுள்ள சகல நடவடிக்கைகளையும் தடுக்க வேண்டுமென்று அவர் கூறினார்.

கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் தேர்தல் நடத்தப்படாவிட்டால் அந்தப் பிரதேசத்தை வேறொரு இராச்சியமாக கருதவேண்டி ஏற்படும்.

குறிப்பாக பாராளுமன்றத் தேர்தலின் போது அந்தப்பகுதியில் உள்ள வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட சுதந்திரம் ஜனாதிபதித் தேர்தலில் வழங்கப்படா விட்டால் அந்தப்பகுதியில் உள்ள மக்களின் ஜனநாயக உரிமை மீறப்படுவதாக கருதப்படும்.

இதன் மூலம் அபாயகரமான சூழல் உருவாகுவதற்கு சந்தர்ப்பம் இருப்பதாகவும் இதனூடாக நாட்டின் ஒரு பகுதியே நாட்டிற்கு சொந்தமற்ற பகுதியாக கருத வேண்டி ஏற்படுமென்றும் அவர் மேலும் தெரிவித் தார். (ந-8)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அவசரகாலச் சட்டம் அமுலாக்கப்பட்டதை தொடர்ந்து யாழில் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு

## யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் மாதாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டு

(தென்மராட்சி)

நாட்டில் அவசரகாலச் சட்டம் அமுலாக்கப்பட்டதைத் தொடர்ந்து ஓமந்தை மற்றும் முகமாலை பாதுகாப்புப் படையின் சோதனைச்சாவடிகளுக்கூடாக கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் ஈடுபடுகின்ற லொறிகளின் போக்குவரத்துச் சேவைகள் கணிசமான அளவு குறைந்துள்ளது. இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடும், விலை அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணயத்தினால் வெளியிடப்பட்டுள்ள செப்ரெம்பர் மாதத்துக்கான நிலவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இணையத்தின் செயலாளர் ரீ. தேவானந்தாவினால் கையொப்பமிட்டு வெளியிடப்பட்டுள்ள அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம் மாநகரசபையிலுள்ள தீயணைக்கும் இயந்திரம் 1885 காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டது. இது பழுதடையும் சந்தர்ப்பத்தில் அத்துறையில் போதிய திறமையும் பாண்டித்தியமும் பெற்ற திருத்தவியலாளர்கள் இல்லாமலிருக்கின்றனர். யாழ்ப்பாண மாநகரசபையின் தீயணைப்புச் சேவையை நல்லமுறையில் மேற்கொள்ளப் போதிய தீயணைக்கும் இயந்திரமும், தீயணைப்பாளர்களும் இல்லாமல் இருக்கின்றனர். யாழ்ப்பாணத்தில் பெரிய அளவிலான தீ அனர்த்தச் சம்பவங்கள் இடம்பெறுமாயின் யாழ்.மாநகர சபையின் தீயணைக்கும் பிரிவினால் அதனை உடனடியாக அணைககக் கூடியநிலை இல்லாமல் காணப்படுகின்றது.

### வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை

யாழ்ப்பாணத்திலுள்ள மாகாணப் பதிவாளர்கள் பணிமனையில் நிலவும் பதிவாளர்களுக்கான தட்டுப்பாடு நீண்டகாலமாக இருந்துவருகின்றது. பதிவாளர்களை நியமிப்பதற்கான பரீட்சையில் பல பரீட்சார்த்திகள் சித்தியடைந்துள்ள போதிலும் கூட, வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

இதேசமயம், யாழ்ப்பாணத்திலுள்ள தபால் திணைக்களத்தில் உயர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருந்து வருகின்றது. இதனால் பொதுமக்களுக்கான சேவைகளை வழங்குவதில் தபால் திணைக்களம் இடர்களையும் பின்னடைவுகளையும் எதிர்நோக்கி வருகின்றது.

### காணி

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கோப்பாய், சாவகச்சேரி, நல்லூர், ஊர்காவற்றுறை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பளை,கரவெட்டி, சங்கானை, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலா பிரிவுகளிலுள்ள அரச காணிகளில் நீண்டகாலமாக இருந்துவரும் வறுமைக் கோடடுக்குக் கீழ் உள்ள 742 குடும்பங்களுக்கு அரச காணிகளைச் சொந்தமாகக கொடுப்பதற்கான ஏற்பாடுகளை காணி செயலணிக் குழு செய்து வருகின்றது.

இந்தவகையில் கோப்பாயில் 380, சாவகச்சேரியில் 26, நல்லூரில் 16, ஊர்காவற்றுறையில் 24, சண்டிலிப்பாயில் 5, உடுவிலில் 46, தெல்லிப்பளையில் 59, கரவெட்டியில் 14, சங்கானையில் 20, பருத்தித்துறையில் 152மாக மொத்தமாக 742 குடும்பங்கள் அரச காணிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இவற்றில் கோப்பாயில் 209, சாவகச்சேரியில் 26, நல்லூரில் 16, ஊர்காவற்றுறையில் 24, சண்டிலிப்பாயில் 5, உடுவிலில் 35 மாக மொத்தமாக இதுவரை 315 குடும்பங்களுக்கு காணிகள் சொந்தமாக வழங்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் இன்னமும் 427குடும்பங்களுக்கு காணி உரிமங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

### வீடமைப்பு

உலக வங்கியின் வீடமைப்புத் திட்டததின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன முரண்பாடுகள் காரணமாகப் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 635 குடும்பங்களுக்கு புதிய வீடுகள் வழங்கப்படவுள்ளன.

அதேபோன்று யுத்தத்தின் காரணமாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட 350 குடும்பங்களுக்கும் வீடுகள் வழங்கப்படவுள்ளன.

இவ்வகையில் மேற்குறிப்பிட்ட 350 வீடுகளில் 200 வீடுகளை உலகவங்கியும் மீதி 150 வீடுகளை ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித்திட்டப் பிரிவும் அமைக்கவுள்ளன என இணையத்தின் மாதாந்த நிலவர அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரு-16)

## இராசி பலன்

26.10.2005

(ஐப்பசி 9,புதன்கிழமை)

நவமி முன்னிரவு 11.34 மணிவரை

ஆயிலியம் பின்னிரவு 5.10 மணிவரை

இராகுகாலம்- 12.03 - 1.33 மணிவரை

சுபநேரம் - 04.33 - 06.03மணிவரை

| | |
|---|---|
| மேடம் | மனச்சஞ்சலம், காரிய இடையூறு, உடல் நலக்குறைவு, உறவினர் சந்திப்பு. |
| இடபம் | பரயாண நன்மை, தனலாபம், உடல் நலம், முயற்சி கைகூடும். |
| மிதுனம் | விவாதம், மாதர் நட்பு, ரோக நிலை, பண விரயம். |
| கடகம் | சயன சுகம், பெரியோர் உதவி, நல்ல முயற்சி, புதிய தகவல். |
| சிங்கம் | சயன சுகக்குறைவு, சத்துரு ஜெயம், திடீர் நன்மை, சுபசெலவு. |
| கன்னி | இஷ்ட சித்தி, புகழ், பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி. |
| துலாம் | நல்ல செய்தி, தொழில் நன்மை, நிலை மாற்றம், உஷ்ண நிலை. |
| விருச்சிகம் | புதிய முயற்சி, பிதா சிந்தை, தன விரயம், கட்டுப்பாடு. |
| தனுசு | வாகன பயம், அபகீர்த்தி, வேலைச்சுமை, காரிய தாமதம். |
| மகரம் | உறவினர் வருகை, நல்ல வரவேற்பு, காரிய அனுகூலம், புதிய திருப்பம். |
| கும்பம் | மனம்கிழ்ச்சி, தடைப்பட்ட காரியம் கைகூடும், போசன நன்மை, உடல் நலம். |
| மீனம் | சொத்துப்பிணக்கு, வியாபார நன்மை, மனச் சோர்வு, சிறுவியாதி. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

## மதுபான விற்பனை நிலையத்தில் குண்டுவீச்சு: இருவர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகருக்கு வெளியே எல்லை வீதியிலுள்ள மதுபான விற்பனை நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட கைக்குண்டு வெடிப்பு சம்பவத்தில் 16வயது இளைஞன் உட்பட இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ரஞ்சன் தினேஸ்குமார் (வயது-16), சீனித்தம்பி துரைசிங்கம் (வயது-55) ஆகிய இருவரும் காயமடைந்துள்ளனர்.

மது அருந்திக் கொண்டிருந்த இரு தரப்பினருக்கிடையில் வாய்த்தகராறு ஏற்பட்டதாகவும், இதனையடுத்து வெளியேறிச் சென்ற ஒரு தரப்பினர் கைக்குண்டை எடுத்துவந்து வீசி வெடிக்கச் செய்ததாகவும் கூறப்படுகிறது. (த)


## இலங்கைப் பொலிஸாரின் செயலுக்கு ஆசிய மனித உரிமைகள் அமைப்பு கண்டனம்

இலங்கைப் பொலிஸார் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்கள் போலவும் காடையர்கள் போலவும் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் சித்திரவதை முறைகளையும் வன்முறைகளையும் கையாளுகின்றனர் என்று ஆசிய மனித உரிமைகள் மையம் மிகக் கடுமையாகக் குற்றம்சாட்டியுள்ளது.

இந்தக் கொடூரங்களைத் தடுத்து நிறுத்த ஐக்கிய நாடுகள் சபை உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது. ஹொங்கொங்கை மையமாகக்கொண்டு செயல்படும் ஆசிய சட்ட ஆதார அமையம் என்ற மனித உரிமையமைப்பின் 180 பக்க அறிக்கை இந்த உண்மைகளை அம்பலப்படுத்தியுள்ளது.

பொலிஸில் சட்டத்தை செயற்படுத்துகிற ஒரு துறையினராக செயல்படாமல் காடையர்களாக பாதாள உலகக் குழுவினரைப் போல் வன்முறைகளையும் சித்திரவதைகளையும் மேற்கொண்டு வருகின்றனர் என்று அதன் அறிக்கை கூறுகிறது.எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதி முதல் 25ஆம் திகதிவரை ஜெனீவாவில் நடைபெறவுள்ள இலங்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணையில் இந்த அறிக்கை தாக்கல் செய்யப்படவுள்ளது.

இலங்கைப் பொலிஸினால் சித்திரவதைகளையும் அதிகார துஷபிரயோகங்களையும் தங்களது அமைப்பின் அறிக்கை முதன்மைப்படுத்தி இருப்பதாக அந்த அமைப்பின் பேச்சாளர் பசில் பெர்னாண்டோ தெரிவிததார்.பொலிஸினால் மேற்கொள்ளும் உடல் மற்றும் உளரீதியான சித்திரவதைகளுக்கு உள்ளானோருக்கு உதவும் வகையிலான அரசாங்கத்தின் நிவாரணங்களை செயற்படுத்துவதில் உள்ள குறைபாடுகளும் இநத அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.(ச-4)





புங்குடுதீவு ஸ்ரீகணேசா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வாணி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வு பெற்ற அதிபர் சி.இரத்தினசபாபதி உரையாற்றுகிறார். அருகில் பாடசாலை அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம், ஆசிரியர்களான திருமதி சி.பாலராணி, திருமதி ச.ஜமுனாராணி, செல்வி ச.மணிமேகலை ஆகியோர் அமர்ந்திருப்பதையும் அதில் நடை பெற்ற கலை நிகழ்வில் ஒன்றையும் படங்களில் காணலாம்.

வாசிப்பு மாதம்
வாசியுங்கள் அகவிழி திறக்கும்
வாசிப்போம்! வாசித்ததை யோசிப்போம்!
காசோலை என்றால் அகவிழி என்ற பெயருக்கும் காசுக்கட்டளை எனில் ஹவலக் ரவுனில் மாற்றக் கூடியதாகவும் அனுப்பவும்.
(வருடச் சந்தா ரூ.300 மட்டுமே)
தொடர்புகட்கு:- அகவிழி. இல-03, டொறிங்ரன் அவனியு. கொழும்பு-07.
தொலைபேசி-011 2506272 E-Mail:ahavili@ viluthu.org
ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி

# இன்று ஒரு தகவல்

## மெய்ப்பொருள் காண்பது அறிவு

தந்தியை விட வேகமாகப் போகக்கூடியது எது?" என்று கேட்டார் ஒருவர். வதந்தி என்றார் இன்னொருவர். அவர் அப்படிச் சொன்னதில் ஒன்றும் தவறில்லை. வதந்தி வேகமாகப் பரவுவதற்கு என்ன காரணம்? ஒன்றுக்கு இரண்டாக மிகைப்படுத்திச் சொல்லும் மனித சுபாவம் ஒரு காரணம். சொல்வதை அப்படியே நம்புவது இன்னொரு காரணம்.

"எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'' என்றார் வள்ளுவர். யார் எதைச் சொன்னாலும் அதை அப்படியே நம்பிவிடுவதா? அறிவு வேலை செய்யவேண்டும் அதில் எந்தளவுக்கு உண்மை இருக்கிறதென்று கண்டுபிடிக்க வேண்டும். முக்கியமான பொறுப்பில் உள்ளவர்களுக்கு இது மிகவும் முக்கியமான ஒரு தகுதி.

ஒரு நாட்டில் ஒரு சாதாரண ஆள் இருந்தான். அவனிடம் ஒரு கழுதை இருந்தது. மிகவும் பிரியமாக வளர்த்தான். அவனுக்கு அது மிக நெருக்கமான நண்பன். வேறு மனிதர்கள் யாரும் கிடைக்கவில்லை போலிருக்கிறது. அந்தக் கழுதைக்கு "கந்தர்வசேனன் '' என்று பெயர் வைத்தான். அந்தப் பெயரைச் சொல்லித்தான் அதை அவன் கூப்பிடுவான். அவ்வளவு பிரியமாக வளர்த்த கழுதை ஒரு நாள் திடீரென்று செத்துவிட்டது. எப்படி இருக்கும் அவனுக்கு? மிகவும் சங்கடப்பட்டான். சாப்பிடக்கூடப்பிடிக்கவில்லை அவனுக்கு. முகத்தை "உம்''மென்று வைத்துக்கொண்டு மிகவும் கவலையோடு இருந்தான். அந்த நேரம் பார்த்து அவனுக்கு வேண்டப்பட்ட ஒருவன் அந்தப் பக்கமாக வந்தான். அவனைப் பார்த்தான். ஏனப்பா இப்படி உட்கார்ந்திருக்கிறாய்?'' என்று கேட்டான். கந்தர்வசேனன் இறந்துவிட்டதாகக் கூறி குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்து விட்டான் அந்த ஆள்.

"கந்தர்வசேனன் யார் ?'' என்று கேட்டான் இவன். இவன் இப்படிக் கேட்டவுடன் அவன் ஓவென்று சத்தம் போட்டு அழ ஆரம்பித்துவிட்டான். அவன் அழும் வேகத்தைப் பார்த்ததும் "சரி கந்தர்வசேனன் முக்கியமான பெரிய மனிதன் போலிருக்கிறது'' என்று முடிவு செய்து கொண்டான். தனது நண்பனின் துக்கத்தைத் தானும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தான். உடனே தலையை மொட்டையடித்து மீசையை வழித்தான். கறுப்பு உடையை அணிந்து கொண்டான்.

கந்தர்வசேனன் இறந்த செய்தி காற்றுவாக்கில் பரவ ஆரம்பித்தது. ஊரில் உள்ள எல்லோரும் இந்தச் சேதியைக் கேட்டதும்... அவர்களும் தலையை மொட்டையடித்துக்கொண்டு கறுப்புத்துணியைக் கட்டிக் கொண்டார்கள். ஒரே நாளில் நகரம் முழுவதும் துக்கத்தில் சூழ்ந்துவிட்டது. எங்கு பார்த்தாலும் மொட்டைத்தலை கறுப்புத்துணி.

அந்த நாட்டு அமைச்சர் இதைப்பார்த்தார். மக்கள் எல்லோரும் வருத்தமாக இருக்கிறார்களே என்று நினைத்து சிலரைக் கூப்பிட்டு "என்ன விஷயம்?'' என்று விசாரித்தார். "கந்தர்வசேனன் இறந்துவிட்டார். அது தான் இப்படித் துக்கம் அனுஷ்டிக்கிறோம்'' என்றார்கள். அவராவது கொஞ்சம் யோசிக்க வேண்டுமே! கந்தர்வசேனன் என்று சொல்கிறீர்களே யார் அது? என்று விசாரிக்கலாம் அல்லவா? விசாரிக்கவில்லை. மக்கள் துயரத்தில் நாமும் பங்கெடுக்கவேண்டும் என்று நினைத்தார். அவரும் மொட்டை அடித்துக்கொண்டு துக்கம் அனுஷ்டிக்க ஆரம்பித்து விட்டார்.

அமைச்சர் இப்படி இருக்கிறார் என்ற செய்தி அரசருக்கு எட்டியது. அவரும் மொட்டைபோட்டுக்கொண்டு துக்கம் அனுஷடிக்க ஆரம்பித்துவிட்டார். அன்றிரவு ராஜா மொட்டைத் தலையுடன் அந்தப்புரத்திற்கு வந்தார். ராணி பார்த்தார். என்ன இது? என்ன விஷயம் உங்கள் துக்கத்திற்கு என்ன காரணம்? என்று கேட்டார். ராஜா மிகவும் கவலையோடு கந்தர்வசேனன் செத்துவிட்டராம். மக்கள் வருத்தத்தில் இருக்கிறார்கள். அதனால் நானும் அவர்களோடு துக்கத்தில் பங்கெடுத்துக்கொள்கிறேன். ஒரு ராஜாவின் கடமை அல்லவா அது என்றார். "அது சரி! கந்தர்வசேனன் யார்? உங்கள் அப்பாவா? அண்ணாவா? எதற்காக தலையை மொட்டையடித்தீர்கள்? என்று கேட்டார் ராணியார்.

அதன் பின் தான் ராஜா யோசிக்க ஆரம்பித்தார். "ஆமாம்! அதுவும் சரிதான்'' என்று நினைத்து அமைச்சரைக் கூப்பிட்டுக் கேட்டார். அவரும் அதன்பின்புதான் யோசிக்க ஆரம்பித்தார். மக்களைக் கூப்பிட்டு விசாரித்தார். ஒவ்வொருவராக விசாரித்துக்கொண்டே கடைசியில் அந்த ஆளிடம் போய்ச்சேர்ந்தார்கள். "கந்தர்வசேனன் யார்?'' என்று கேட்டார்கள். எனது கழுதை என்றான் அவன். ராஜாவும் மந்திரியும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார்கள்.

எல்லோரும் சொல்வதை கண்ணை மூடிக்கொண்டு நம்ப ஆரம்பித்தால் இப்படித்தான் முடியும். ஸ்ரீ/சிவானந்தர் கூறிய குட்டிக் கதை இது. இந்தக் காலத்திலெல்லாம் சிலர் கூறும் விஷயம் 'கப்சா' மாதிரி இருக்கும். ஆனால் அதிலும் உண்மை இருக்கும்.

ஒருத்தர் அப்படித்தான் என்னிடம் வந்தார். "சார்! 10 பேர் ஒரே குடையில் வந்தோம் சார். ஒரு சொட்டுத் தண்ணீர் கூட எங்கள் யார் மீதும் படவில்லை'' என்றார். "அது எப்படி?'' என்றேன். "ஏனென்றால் அப்போது மழை பெய்யவில்லை'' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# யார் எதிர்த்தாலும் நவ. ஆரம்பத்தில் சபையில் பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும்

## -பிரதமர் மஹிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் எதிர்ப்பினை அக்கறைப்படுத்தவேண்டிய அவசியமில்லை. யார் எதிர்த்தாலும், திட்டமிட்டபடி நவம்பர் மாத ஆரம்பத்தில் வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டையும் நாட்டு மக்களையும் முன்னேற்றும் ஒரு சிறந்த நிதியறிக்கை தொடர்பில் ஐ.தே.க. அச்சமடைந்துள்ளது. அதனாலேயே அந்த நிதியறிக்கையை சமர்ப்பிக்கவிடாது ரணில் தடுக்கிறார்.

எங்களது தேர்தல் விஞ்ஞாபனமும் நிதியறிக்கையும் ஒன்றுடன் ஒன்று பின்னப்பிணைந்துள்ளன.

நாங்கள் மக்களுக்கு அளித்தவாக்குறுதிகளை எம்மால் நிறைவேற்ற முடியும் என்று மக்களுக்குத் தெளிவு படுத்துவதற்கு எமது நிதியறிக்கை உதவும்.

தேர்தல் வந்தாலும் வராவிட்டாலும் நாட்டின் முன்னேற்றம் பின் தள்ளிப்போடுவதற்குரிய ஒன்றல்ல என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-4)

# சுனாமியினால் பாதிக்கப்பட்டோருக்கு உரிய உதவிகள் வழங்கப்படவில்லை

## அரசசார்பற்ற இணையத் தலைவர் சுட்டிக்காட்டு

(தென்மராட்சி)

சுனாமி ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற குறிப்பிட்ட ஒரு சில சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களைத் தவிர ஏனையவை எத்தகைய ஆக்கபூர்வமான உதவிகளையும் சேவைகளையும் இன்று வரை வழங்கவில்லை.

இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தமக்கான தேவைகளைப் பெறமுடியாத நிலையில் ஏமாற்றமடைந்து வருகின்றனர். இத்தகைய நிலை இங்கு தொடர அனுமதிக்கப்படக் கூடாது.

இவ்வாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் பொ.விக்னேஸ்வரன் சுனாமி ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட உதவிகள் பற்றிய மதிப்பீட்டை மேற்கொள்ள யாழ்ப்பாணம் வந்திருந்த வெளிநாட்டு அமைப்புக்களின் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

இணையத் தலைவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடும் போது,

வடமராட்சிப் பிரதேசத்தில் ஆழிப்பேரலை ஏற்பட்டதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகள் வழங்குவது என்ற போர்வையில் நூற்றுக்கணக்கான நிறுவனங்கள் வந்திருந்தன.

இவையெல்லாமே விபரங்கள் திரட்டவும் தேவைகளை இனங்காணவுமே வந்திருந்தன. ஆனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அளித்த வாக்குறுதிகள் எதுவுமே காப்பாற்றப்படவில்லை.

இந்த நிலையில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவர்களது தேவைகள் இன்னமும் பூர்த்தி செய்யப்படாமல் இருந்து வருகின்றன. யாழ்ப்பாணத்தில் வேலைசெய்ய வருகின்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது வளங்கள் பற்றிய உண்மைத்தகவல்களையும் விபரங்களையும் யாருக்குமே வெளிப்படுத்துவதில்லை.

அதேசமயம், வளங்கள் ஒழிவு மறைவு இன்றி வெளிப்படுத்தப்படவேண்டும் என யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களும் கிராமிய மட்ட அமைப்புக்களும் போதிக்கின்றன. நாம் சரியாக இருந்து கொண்டு தான் ஏனையவர்களுக்குப் புத்திமதி கூறவேண்டும் என்பதை இத்தகைய நிறுவனங்கள் புரியாமல் இருக்கின்றன என்றார். (ந-16)

# கங்கொடவில சோமதேரரின் மரணத்தில் மர்மம் நீடிக்கிறது

## -அத்துரலிய ரத்ன தேரர்

(கொழும்பு)

மறைந்த கங்கொடவில சோமதேரரை ரஷ்யாவிற்குக் கூட்டிச் சென்ற ஷாந்தி ஜயசேகரவை நாட்டிற்குத் திருப்பி அனுப்ப ரஷ்ய அரசைக் கோர வேண்டும் என ஹெல உறுமய அரசாங்கத்தை கோரியுள்ளது.

சோமதேரரின் மரண விசாரணைகளுக்கென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருந்த 3 பேர் களடங்கிய ஜனாதிபதி ஆணைக்குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தவுடன் மேற்படி விவகாரத்தை ஹெல உறுமய ஆரம்பித்துள்ளது.

அவ்வறிக்கையில் ஷாந்தி ஜயசேகர பற்றி சான்றுகள் குறிப்பிடப்பட்டிருக்காததால் விசாரணை முழுமையானதல்ல என ஹெல உறுமயவின் பேச்சாளர் அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவரின் மரணம் மர்மமாகவுள்ளதாகவே அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. தேரரின் ரஷ்ய விஜயத்திற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டவர் ஷாந்தியின் சாகோதரர் சிசிற ஜெயசேகரவே. தேசிய பாதுகாப்பாளரான பிக்குகளைப் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சில குழுக்களின் சதிகாரணமாகவே மரணம் சம்பவித்துள்ளது என ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இருவர் கூறியுள்ளனர்.

ஆணைக்குழு முன்னாள் மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி எதிர்சூரிய, அனுரா விஜயசுந்தர, பேராசிரியர் மெண்டிஸ் ரோகணதீர ஆகியோர் அடங்குவர். இதில் மெண்டிஸ் கங்கொடவில சோமதேரரின் மரணத்தில் சதியில்லை எனக் கூறியுள்ளார்.

கங்கொடவில சோமதேரர் 2003 டிசம்பரில் ரஷ்யாவில் மரணமானார். இவரின் மரணமே ஹெல உறுமய உருவாக காரணமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-6)

# நள்ளிரவில் துணிகரத் திருட்டு— ஆயுத முனையில் நகைகள் அபகரிப்பு

(சாவகச்சேரி)

நள்ளிரவு வேளை,திடீரென வீட்டினுள் புகுந்த திருட்டுக்கும்பல் தனித்திருந்த பெண்கள்,முதியவர்களை கத்தி முனையில் அச்சுறுத்திவிட்டு அவர்கள் அணிந்திருந்த தங்க ஆபரணங்கள், பல ஆயிரம் ரூபா பணம் முதலியவற்றை அபகரித்துச் சென்றுள்ளது.

தென்மராட்சி மட்டுவில் வடக்கு மானா வளை என்ற இடத்திலுள்ள சின்னத்துரை என்பவரது வீட்டில் கடந்த வாரம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

கத்தி முதலிய குரிய ஆயுதங்களுடன் நள்ளிரவில் வீட்டினுள் புகுந்த எழுபேர் அடங்கிய குழுவினர் சத்தம் போட்டால் கத்தியால் குத்தி கொலை செய்துவிடுவதாக மிரட்டி அணிந்துள்ள தங்க நகைகளை கழற்றித் தருமாறு கூறி அதனை பெற்றுக் கொண்டதோடு பெட்டியினுள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இருபதாயிரம் ரூபா பணத்தினையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

பிரஸ்தாப வீட்டின் முன்பாக இருக்கும் வாசிகசாலையில் நிர்வாக அமைப்புக் கூட்டம் இடம்பெற்று முடிந்து அவர்கள் கலைந்து செல்லும் வரை காத்திருந்தே இக் கும்பல் கைவரிசையை காட்டியுள்ளது.

அண்மைக்காலமாக தென்மராட்சியில் குழுத் திருடர்கள், மோட்டார் சைக்கிள் திருடர்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளது. சில வாரங்களின் முன்பு சாவகச்சேரி வடக்கு மருதடி சந்தியில் ஓர் வீட்டில் பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.




### நாளைய தலைவர்கள்

பிஞ்சுக் குஞ்சுகளே - இம்
மண்ணில் எத்தனையோ
இடர்கள் வந்தாலும்
கல்வியின் அழிவுக்கு
அத்திபாரம் போடோம்- என
உறுதியுடன் கற்கின்ற நீங்கள் தான்
நாளைய தலைவர்கள்

எஸ்.தாட்சாயினி,
நல்லூர்.

### கல்வி நிலைக்கும்

சனப்பிள்ளைகள் தமிழ்ப் பற்றினால்
ஆனா சொல்கிறது... - எங்கள்
பிள்ளைகள் சினிமா மோகத்தால்
மனா படமல்லவா சேகரிக்குதுகள்...!
கையில் புத்தகம் இருந்தும்
கணகளால் உற்று ஆசிரியரை நோக்கும்
கல்வி கனதியானது - எங்கள்
கனாக்கள் நிறைவேறுவதற்காய்
நாங்களும் ஆங்கிலம்
கற்பதில் தவறில்லை.

தமிழ் உதயம்,
கொழும்புத்துறை.

### சீர் தூக்கும் கல்வி

சுனாமி வந்து எம் உறவுகளை
சுருட்டிச் சென்றாலும்
சீனப் பெருஞ்சுவர்
சீர்குலைந்து விழுந்தாலும்
சின்னவர்கள் எம்மை
சீர்தூக்கும் கல்வியை~ நாம்
திடமாகவே தொடர்ந்திடுவோம்.

தமிழ்வாணி,
நல்லூர்.

### வேண்டுதல்

இயற்கை அன்னையின்
கொடூரத் தாண்டவத்தில் இருந்து
தப்பி நிம்மதியாகவும்
சுதந்திரமாகவும் வாழ்வதற்கு
இச்சிறுவர்கள் இறைவனிடம்
மன்றாடி வேண்டுகிறார்கள்.
சிறுவர்களின் குரலுக்கு
செவி மடுப்பானோ
இறைவன்...?

P.சறோ,
சித்தன்கேணி.

## மௌனத்தின் தேடல்கள் - 72



### ஆச்சரியம்

கனனியைக் கண்ட
கலியுகப் பிள்ளைகள் – இன்று
ஏட்டினைத் தொடுவதற்கு
எட்டியே நிற்கின்றனர்
இங்கே
நீங்களோ ஆசிரியர் இல்லாமலே
'அ' வரியை
ஆர்வத்துடனே கற்கிறீர்களே
இது ஆச்சரியம்தான்.

ம.தர்மினி, கோண்டாவில்

### இன்றைய தமிழ்ப் பிள்ளைகள்

அகர வரிசையே
ஆர்வத்துடன் உச்சரிக்கும்
ஆங்கிலேயப் பிள்ளைகள் நீங்கள்
ஆண்டவன் வருகிலும்
அகரம் (தமிழ்) படியோம் ~ என
ஆங்கில மோகத்தில் மிதக்கிறார்கள்
இங்கு ~ எம்
தமிழினப் பிள்ளைகள்.

க.வினோதன், உடுவில்.

### கற்றுக்கொள்ளுங்கள்

சிறுவர்களே! உங்கள்
எதிர்காலம் கையில்தான் இருக்
கின்றது
அதனால் எங்கேயும்
பராக்குப் பாராமல்
கல்வியை சிறப்பாகக்
கற்றுக்கொள்ளுங்கள்
நாளை உங்கள் எதிர்காலம்
சிறக்கும்!

சசி,
அச்சுவேலி.

## மௌனத்தின் தேடல்கள் - 74



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்திலதோன்றும உள்ளத்து உணர்வுகளை மிகச் சிறிய கவிதைகளாக்கித் தபால் அட்டையில் வலம்புரி-சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள. கிடைக்க வேண்டிய இறுதித் திகதி - 31.10.2005

அனுபபவேண்டிய முகவரி:- மௌனத்தின தேடல்கள் - 74
வலம்புரி - சங்குநாதம்
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம.

### காத்திருப்பு

காலைமுழுவதும் ஒளி வீசிய
கதிரவன் ஓய்வெடுப்பதுபோல்
கடலின் மடியினில் மறைகின்றான்
இருள் சூழ்ந்த வானில் ஒளிகாட்டுவதுபோல்
வெண்ணிலாவும் நட்சத்திரகூட்டமும்
மின்னி ஒளிர்ந்து கொண்டு இருக்கின்றன
என் மனம் மட்டும் ஏனோ
இன்னும் இருள்படிந்தபடி காணப்படுகிறது
கரையை மூட்டிமோதும் அலைகள் -என்
சோகத்தை சொல்லுமாறு
கேட்பதுபோல் தோன்றுகின்றது
உன்னை நினைத்த நாள் தொடக்கம்
காத்திருக்கிறேன்
காலமெல்லாம் காத்திருக்கும்
என்னிடம் வரகருணை இல்லையா உனக்கு?

எம். இந்திரகலா, யோகபுரம்.

### தரணியில் காதல் வாழட்டும்...

உலகில் பிறந்திட்ட போது
ஒவ்வொரு உயிரிலும்
ஒன்றாய் கலந்தது தான் காதல்
காதலை கட்டியணைத்தவர்கள்
காதலை மறந்ததில்லை
அன்புக்காய் தன்னை
தொலைத்தவருண்டு
அன்புக்காய் கற்பனையை
வளர்த்தவர்களும் உண்டு
காதலில் மூழ்கியவருக்காக
கல்லறை கட்டியவர் உண்டு
உறவுகள் கூடி எதிர்த்தாலும்
உடல்கள் இரண்டும் பிரிந்தாலும் உள்ளம்
மட்டும் பிரியாது
சோலையில் வீசும் தென்றல்
மெல்ல வந்து மேனிதடவி
இரகசியக்கதை சொல்லும் வரை
தரணியில் புனிதக் காதல்
தழைத்து வளரட்டும்!

வெண்ணிலவன்,
சுன்னாகம்

### இளைஞரே கேளும்



இன்றைய இளைஞரே
இனிதாய்க் கேளும்!
பட்டறிவுள்ள பழுத்த
பழங்களின் அறிவுரையை
உம் சுயத்திற்கு
உருக்கொடுங்கள் –
அதுவே
உம் உயர்வுக்கு
உரிய வழி திறக்கும்
மாற்றானைப்
பிரதியெடுக்கும்
மாயையினுள் – உம்மை
மாந்தினால் அதுவே உம்
மாய மறைவிற்கு
வழிசமைக்கும்

கி.குகநாதன்,
பருத்தித்துறை.

### சீதனம்

சீதனத்தைச்
சீராய்க் கேட்கும் – ஆண்களே
சிந்திக்க சில வரிகள்
பெண்களின் வாழ்க்கை
சீதனக் கொடுமையால்
சிதைந்து கிடப்பதை
அறிந்திடாயோ ஆணினமே
அன்றாடம் வீதி சுற்றும்
உமக்கு வேண்டுமா?
கோடி பணம்
கொடுமையிலும் கொடுமை
பாசமுள்ள கணவன் மனதில்
பத்தினியாய் வாழ
பாழ்பட்ட சீதனம் தேவையா?
கல் போன்ற மனிதர் மனதில்
கண்ணகி போன்று வாழ
காசு தான் வேண்டுமா?
இரு மனம் இணையும்
திருமணத்திற்கு
பெரும் பணம் தேவையா?
அடக்கி ஆளும் ஆண்களுக்கு
இரக்கம் தான் உண்டா?
இருந்து விட்டால் – சீதனம்
கேட்டு பெண்களின்
வாழ்க்கையை சீரழிப்பாரா?
பெண் வீட்டுக்காசைப்
பிச்சைக் காசாய் வேண்டி
உட்கார்ந்து உண்பார்களா?
இரண்டு கையும்
இரண்டு காலும் அதிக பலமும்
தந்த இறைவன் சொன்னானா?
சீதனம் வாங்கு என்று
ஆணினமே நீங்கள்
விற்பனை ஆகும் சந்தைப்
பொருளா ?
ஆண்களே சிந்தியுங்கள்
சிறிது நேரம்
சீர் கொண்டு வராப்பெண்ணிடம்
தினம் தினம்சண்டை போடுவதா?
சதிராவதை தான செயவதா?
உன் தங்கையே சீதனத்தால்
சிறைப்பட்டிருக்கும் போது
யாரோ பெற்ற பெண்ணிடம்
சீதனம் கேட்பதை
சிறப்பென்று நினைப்பதா?
சிந்தியுங்கள் ஆண்களே

எஸ்.சிவதுக்கா, கோண்டாவில்

### முற்றுப் பெறாத கவிதையாய்

அன்று நீ என் விழிபார்த்து பேசிய போது
சிதறியது என் சிந்தனை
அன்று நீ என் கை தொட்டு பேசியபோது
சிதறியது என் கலங்கள்
அன்று நீ என்னை பிரிந்து போன போது
சிதறியது என் கண்ணீர் துளிகள்
இருந்தும் இன்றவரை மௌனமாய்...
தொண்டை வரை வந்த வார்த்தைகளை
மீண்டும் விழுங்கிக் கொண்டு இன்றுவரை
அமைதியாய்... - ஏனெனில்
நான் சொல்லாப் போகும் வார்த்தை
எம் உறவை பிரித்துவிடும் என்பதால்
இன்றுவரை நான் முற்றுப் பெறாத கவிதையாய்
அன்பே புரிந்து கொண்டால்
புனைந்திடு பதில் கவிதை!

சந்திரகலா, உரும்பிராய்.

# என்னுடைய ஆட்சியில் மனிதாபிமானம் மிக்க ஜனநாயகம் பேணப்பட்டது - ஜனாதிபதி பேட்டி

**ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் பெரும் குழப்பங்களுக்குள்ளாகியிருந்த நாட்டை நான் ஆட்சிப் பொறுப்பேற்றதும் மீட்டெடுப்பதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டேன்.**

**இதன் பலனாக மனிதாபிமானம் மிக்க ஒரு ஜனநாயக ஆட்சியை எனது அரசாங்கம் நாட்டில் உருவாக்கியது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குறிப்பிட்டுள்ளார்.**



தென்னிலங்கை வார இதழான 'த சண்டே ஒப்ஸேவர்' க்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அப்பேட்டியின் முழு விபரமும் வருமாறு:-

***கேள்வி:- உங்களுடைய ஆட்சிக் காலத்தில் மிகவும் முக்கியமான வெற்றியாக நீங்கள் எதைக் கருதுகிறீர்கள்?***

**பதில்:-** பதினேழு வருடங்கள் ஆட்சிப் பீடத்தில் இருந்து நாட்டை ஒரு குழப்பமான நிலைக்கு ஐக்கிய தேசியக்கட்சி கொண்டு வந்த காலத்தின் முடிவுப் பகுதியில்தான் நான் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றேன். அந்நேரம் சட்டமும் ஒழுங்கும் சீர்குழைந்து போய் "கறுப்புப் பூனைகள்", "பச்சைப் புலிகள்" போன்ற எல்லாவிதப் படையினரும் பயங்கரத்தை விதைத்துக் கொண்டிருந்தனர். மனித உரிமைகள் பெருமளவில் மீறப்பட்டுக் கொண்டிருந்ததால் மக்கள் அனை

**'த சண்டே ஒப்ஸேவர்' ஆங்கில இதழுக்கு ஜனாதிபதி அளித்த பேட்டி**

வரும் பயத்தின் உச்சியில் வாழ்க்கை நடாத்திக்கொண்டிருந்தனர். ஜனநாயகம் சரியாகப் பேணப்படாததால் எதையும் எதிர்த்துக் குரல் கொடுத்தல் எனும் அம்சம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

என்னுடைய தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து நான் இனிமேல் எவ்வித வன்முறைகளுக்கும் இடம்கொடுக்கக்கூடாது. என்பதை உறுதிப்படுத்திக் கொண்டேன். சட்டமும் ஒழுங்கும் மீண்டும் பேணப்படும். ஒரு சூழ்நிலையை உருவாக்கினேன். இதனால் ஜனநாயக முறையைப் பின்பற்றும் ஒரு அரசாங்கச் சூழல் மீண்டும் நடைமுறைக்கு வந்தது. இரவு நேரத்தில் வீட்டுக் கதவை தட்டக்கூடிய ஓர் சூழல் முடிவிற்கு வந்தது. தாய்மார்களும் பெண்களும் தங்கள் பிள்ளைகளும் கணவன்மாரும் பத்தி ரமாக வீடு திரும்புவார்கள் என்கின்ற ஒரு பாதுகாப்பு உணர்வுடன் இருக்கக்கூடிய ஒரு சூழல் உண்டானது. மனித உரிமைகள் மீண்டும் மதிக்கப்படலாயிற்று.

இதுமட்டுமல்லாது இதற்கு முந்திய ஆட்சியில் காணாமற் போன பொதுஜனங்கள் பற்றிய ஒரு புலனாய்வை செய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் மூன்றை அமைத்தேன். அவ் ஆணைக்குழு இது சம்பந்தமாக புலனாய்வை மேற்கொண்டு அதன் அடிப்படையில் அறிக்கையொன்றை சமர்ப்பித்தது. அவ்வறிக்கையின் துணையுடன் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டதுடன் குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராக சட்டரீதியில் நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. சுருக்கமாகச் சொல்லப் போனால் என்னுடைய ஆட்சியில் மனிதாபிமானம் கொண்ட ஒரு ஜனநாயக அரசாங்கத்தை உருவாக்கினோம்.

***கேள்வி:- நீங்கள் குறிப்பிட்ட மனிதாபிமான ஜனநாயக அரசாங்கத்தை உருவாக்க நீங்கள் அறிமுகப்படுத்திய சட்ட திட்டங்கள், நிறுவனங்கள் அவற்றின் பணிகள் பற்றி விளக்கமுடியுமா?***

**பதில்:-** முந்தைய ஆட்சியில் ஒருவரை சித்திரவதைக்குட்படுத்தலும் வன்முறையும் பழக்கப்பட்ட ஒரு செயலாக இருந்தது. இதற்காக வதை மற்றும் துன்புறுத்தல்களுக்கு எதிரான சட்டம் ஒன்று நவம்பர் 1994இல் பாராளுமன்றத்தில் உருவாக்கப்பட்டது. இதன்படி ஒருவரை சித்திரவதைக்கு உள்ளாக்குதல் என்பது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டது. இதைவிட மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்குகள், சர்வதேச மனிதாபிமானம் பற்றிய சட்டங்கள், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் போன்ற பல தொடர்பாடல்கள் சட்ட வல்லுனர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் நடத்தப்பட்டது.

மேலும் வடக்கு-கிழக்கு உட்பட இலங்கையின் எல்லாப் பகுதியிலும் மனித உரிமைகள் விசாரணை ஆணைக்குழுவை அமைத்தோம். சட்டக்கோவையில் போதைமருந்து கடத்தல் மற்றும் பாலியல் பலாத்காரம் போன்ற குற்றங்களுக்கு மற்றவர்களுக்கு எச்சரிக்கை செய்யும் விதத்தில் கடும் தண்டனை விதிக்கும் வகையில் சட்டக் கோவையைத் திருத்தினோம்.

இவற்றுள் முக்கியமாகக் குறிப்பிடக்கூடியது ராகிங் எனப்படும் 'பகிடிவதை'யைத் தடுப்பதற்காக 1998இல் அமுலுக்கு வந்த பகிடிவதை தடுப்புச் சட்டம் ஆகும். இதன் விளைவுகளை உடனடியாகவே காணக்கூடியதாக இருந்ததை இச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இத்துடன் சிறப்பு அணி ஒன்று சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் அதனைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் உருவாக்கப்பட்டது. இதன்படி தேசிய சிறுவர் பாதுகாப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. இந்தச் சட்டமும் சிறுவர் பாதுகாப்பு மையமும் தென்னா சியா முழுவதுக்கும் ஒரு முன்மாதிரியாகவே விளங் கியது. இது ஐக்கிய தேசிய அமைப்பின் பாராட்டையும் பெற்றது. மேலும் பெண்கள், குழந்தைகள் போன்றோரை விசாரிப்பதற்கு சிறப்புப் பகுதி ஒன்றும் எல்லாக் காவல் நிலையங்களிலும் ஏற்படுத்தப்பட்டது. அத்துடன் கல்வி சம்பந்தமான மறுசீரமைப்புப் பணிகள் பலவும் பெருமளவில் ஏற்படுத்தப்பட்டன. இது ஆரம்பக்கல்வி, இரண்டாம் நிலைக்கல்வி என்று கல்வியின் எல்லா நிலையிலும் சீரமைப்பு பணியைத் தொடர்ந்தது.

சமுர்த்தி இயக்கம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் வருமானத்தையும் உயர்த்துவதற்காக உருவாக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டது. மேலும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்களுக்கு வெறுமனே புனரமைப்புப் பணிகளைச் செய்வதோடு நின்றுவிடாது அவர்களை உயர்தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடச் செய்வதை நோக்கமாகக் கொண்டு இவ் இயக்கம் செயற்பட்டது.

***கேள்வி:- உங்கள் அரசாட்சி மக்கள் நலனில் அக்கறை கொண்டது என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் ஆயிரக்கணக்கான பாதுகாப்புப் படையினர் வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தத்தால் உயிர் நீத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் என்ன செய்தீர்கள்?***

**பதில்:-** இதற்காக ஜனாதிபதி தலைமைச் செயலகத்தில் ஒரு தனிப்பிரிவு அமைக்கப்பட்டு அப் பிரிவு இராணுவ பொலிஸாருக்கு உளவியல் ரீதியில் ஆதரவு வழங்கும் பணியை மேற்கொண்டு வருகின்றது. இதன் நோக்கங்களாவன

I) நிர்வாகப் பிரச்சினை குழப்பம் போன்றன ஏற்படும் வேளைகளில் அவர்களுக்கு பக்கத் துணையாகச் செயற்படல்.

II) உடல் ரீதியாக காயத்துக்கு உள்ளாகும் வேளைகளில் உணர்வு ரீதியான ஆதரவை வழங்கல்.

III) இவ் ஆதரவை பிரதேச மாவட்ட மற்றும் மாகாண ரீதியில் உள்ள எல்லோருக்கும் வழங்குவதற்காக ஏற்பாடுகளை மேற் கொள்ளல்.

IV) கொல்லப்பட்ட, காயப்பட்ட மற்றும் காணாமற் போனவர்களுடைய ஆய்வுகளில் அதிகாரத்திற்கும் மற்றவர்களுக்கும் இடையே தொடர்பாடலை ஏற்படுத்திக் கொடுத்தல்.

இதனைத் தொடர்ந்து ரண வீரா சேவா மையம் உருவாக்கப்பட்டதுடன் கண்டி மல்பிட்டியாவில் 2001ஆம் ஆண்டில் இராணுவ வீரர்கள் நினைவாகவும் அவர்களுக்கு மரியாதை செய்வதன் பொருட்டும் தேசிய நினைவுப் பூங்கா ஒன்று உருவாக்கப்பட்டது.மேலும் இறந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு வீடு வழங்கும் திட்ட மும் அவர்களின் குழந்தைகளுக்கு புலமைப் பரிசில் உட்பட பல நலன்புரித் திட்டங்களும் என்னால் கொண்டுவரப்பட்டதுடன் ஜூன் 7 ஆம் திகதி இறந்த இராணுவ வீர்களுக்கான நினைவு கூரும் நாளாகவும் பிரகடனப் படுத்தப்பட்டது.

***கேள்வி:- பெண்கள், குழந்தைகளின் முன்னேற்றத்திற்காகவும் அவர்கள் பாதுகாப்பிற்காகவும் செய்யப்பட்ட வசதிகள் பற்றி சற்று விளக்கமாக சொல்ல முடியுமா?***

**பதில்:-** மேலே குறிப்பிட்டவற்றுடன் இலங்கையில் பெண்கள், குழந்தைகளின் பாதுகாப்பிற்காக சட்ட ஒழுங்குகள் யாவும் பலப்படுத்தப்பட்டன. உள்நாட்டு வன்முறை தடுப்புச்சட்டம் 2005 இதற்கு சரியான உதாரணம் எனலாம். இத்துடன் குழந்தைப் பேற்றின் போது தாய்மார்களுக்கு வழங்கப்படும் விடுமுறை நாட்களின் எண்ணிகை அதிகமாக்கப்பட்டது. சர்வதேச குழந்தைகள் கடத்தல் தடுப்புச் சட்டத்தின் குழந்தைகள் போதைப் பொருட்களுக்கு அடிமையாவதை தடுத்ததுடன் அவர்களை துஷ்பிரயோகம் செய்பவர்களிடமிருந்து பாதுகாக்கும் ஒரு சட்டமாகவும் விளங்கி யது. பெண்களையும் குழந்தைகளையும் துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் கடுமையாக்கப்பட்டன. பெண்களுக்கு கல்வி வழங்குவதுடனேயே ஏராளமான பெண்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் நடைமுறைக்கு வந்தன. இது பெண்கள் ஒரு உயர்நிலையை அடைய வழிவகுத்தது எனலாம். இத்துடன் ஆண்,பெண் வேறுபாடு என்கிற ஒரு கருத்தை அடியோடு நீக்கினேன். இதன் பெறுபேறாக ஏராளமான பெண்கள் முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவப் பொறுப்புகளில் அரசாங்க மற்றும் தனியார் வேலைகளில் பொறுப்பு வகிக்கக் கூடிய ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் உள்ள குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும்

**தமிழில்: கிருத்திகா தருமராஜா**

பல விசேட அமர்வுகள் நடத்தப்பட்டன.

இவற்றுடன் இதற்கு முன்னால் சமூகக் கட்டமைப்பில் பெண்களும் குழந்தைகளும் கல்வி மற்றும் ஆரோக்கியம் போன்றவற்றில் எதிர்நோக்கிய கஷ்டங்கள் நீக்கப்பட்டன.

***கேள்வி:- உங்கள் ஆட்சியில் ஜனநாயகம் அதிகமாகப் பேணப்பட்டது என்று நீங்கள் எதன் அடிப்படையில் கூறுகிறீர்கள்?***

**பதில்:-** நான் ஏற்கனவே சொன்னது போல முன்னையை ஆட்சிக் காலத்தில் இருந்த பயங்கரவாதத்தை இல்லாதொழித்தேன். கருத்து வெளியிடும் சுதந்திரம், ஒன்றாகக் கூடும் சுதந்திரம் மற்றும் தனி மனித சுதந்திரம் போன்ற பல சுதந்திரங்களை மீண்டும் கொண்டுவந்தேன். எல்லாவற்றுக்கும் மேலாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் 1978ல் ஆண்டு அரசியலமைப்பில் உத்தரவாதம் கொடுத்திருக்காத 'வாழ்வதற்கான சுதந்திரம்' நான் மீளக் கொண்டு வந்தேன். இப்போது அரசாங்கத்தைப் பற்றிய அவதூறு செய்திகளை பரப்பக்கூடிய அளவிற்குக் கூட ஊடகத்துறை சுதந்திரமாக இருப்பதை நீங்கள் அவதானித்திருக்கலாம். அதிக எண்ணிக்கையான பத்திரிகை மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் விரிவுபடுத்தப்பட்டதும் என்னுடைய ஆட்சிக்காலத்தின் போதுதான் என்பதையும் இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

எல்லோருக்கும் தெளிவாகத் தெரிந்த ஒரு விடயம் என்னவென்றால் வர்த்தக சங்கங்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடினால் அதில் வெற்றிபெறக்கூடிய ஒரு சூழல என் ஆட்சியில் இருந்தது. 1980களில் இது போல வர்த்தக சங்கத்தினர் போராட்டம் நடத்தியபோது அவர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மாகாண மற்றும் எல்லா அரசாங்க நிறுவனங்களும் இதற்கு முந்திய ஆட்சியில எல்லா வேலைகளையும் தாமதமாகவே செய்து முடிக்கக் கூடிய ஒரு நிலைமை என் ஆட்சியில் மாறியது. அதுபோல யாரோ ஒரு முகம் தெரியாதவரால் அனுப்பப்படுகின்ற ஒரு செய்தி நாட்டையே ஸ்தம்பிக்கச்செய்யும் ஒரு பயங்கர நிலை என் ஆட்சியில் முற்றாக நீங்கியது.

நான் எல்லா சமூக மக்களின் நலனை உரிமை வகிக்கும் உத்தரவாதம் கொடுக்கும் ஒரு புதிய அரசியலமைப்புப் பற்றிய கருத்தைக் கொண்டுவந்தேன். ஆனால் துரதிஷ்டவசமாக ஐக்கிய தேசியக் கட்சி வேண்டுமென்று பாராளுமன்றத்தில் அதைத் தடுத்து நிறுத்திவிட்டது. □

# கடற்றொழிலாளர்களுக்கு உபகரணங்கள் கையளிப்பு

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள கொட்டடி, சுப்பர்மடம், எரிஞ்ச அம்மன் கோவிலடி ஆகிய மூன்று கிராமங்களில் இருந்து முதல்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கான மீன்பிடி உபகரணங்களை அறவழிப் போராட்டக்குழு எதிர் வரும் 3ஆம் திகதி தம்பசிட்டியில் வழங்கவுள்ளது.

இலங்கைக்கான சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் நிதியுதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்டு வரும் வாழ்வாதாரத் திட்டத்தின் அடிப்படையில் இவ் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

அறவழிப் போராட்டக்குழுவின் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், இலங்கைக்கான சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தீன் மாவட்ட முகாமையாளர் திருமதி ஞானச்செல்வி சிங்கேஸ்வரன் பிரதம விருந்தினராகப் பங்குகொண்டு உபகரணங்களைக் கையளிக்கவுள்ளார். (ற-16)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியில்

# வாக்களிப்பு நிலையம் அமைக்க 'பவ்ரல்' அமைப்பு கோரிக்கை

சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட பகுதிகளில் தேர்தல் நடவடிக்கைகள் பாதிக்கப்படுமென சுதந்திரமானதும் நீதியுமான தேர்தலுக்குமான மக்கள் அமைப்பான பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. சுனாமியால் இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களிலிருந்து வெளியேறி வேறு பிரதேசங்களிலுள்ள உறவினர்கள் அல்லது நண்பர்களின் வீடுகளில் வாழ்ந்து வருவதாக அந்த அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் போது அவர்களே தமது வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ள தபால் நிலையங்களுடன் தொடர்புகொள்ள வேண்டியுள்ளது அது சாத்தியமானதல்ல.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதே இதற்கு உரிய தீர்வு.இந்த விடயம் குறித்து தமது அமைப்பு தேர்தல் ஆணையாளரிடம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அவ்வமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.(த-9)

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு-2005

## மானிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

1.யா/மா/ 15திரு. இராசலிங்கம சுந்தரலிங்கம்
2.யா/மா/48திரு. தாமோதரம்பிள்ளை பொன்னம்பலம்
08. கேள்விக்காரர்கள் (Bidders)குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ சங்கங்களல் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளை சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ சங்கத்திற்கும் விநியோகிககப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும.

09. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயல்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

10. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்திற்கான விலை, மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிாணயக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணம் கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

11. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

க.கணேஷ்,
தலைவர்/ அரச அதிபர்,
மாவட்ட கேள்விச் சபை/ மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

# யாழ். மாவட்டத்தின் உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு ஆவனசெய்வேன் - ஜேர்மன் பயிற்றுவிப்பாளர் கொல்கா






ஜேர்மன் நாட்டு உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர் கொல்கா ஒப்பமென் யாழ்.குடாநாட்டு உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட உதைபந்தாட்ட வீரர்களுக்கு இருநாள் பயிற்சிகளை நடத்தினார். இப்பயிற்சியானது யாழ். பொது விளையாட்டரங்கில் நேற்று முன்தினமும், நேற்றும் இடம்பெற்றது.



யாழ். மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் ஜேர்மன் பயிற்றுவிப்பாளருடனான பத்திரிகையாளர் சந்திப்பொன்று நேற்றுக் காலை யாழ் சுற்றுச் சூழல முகாமைத்துவ அலுவலகத்தில் இடம்பெற்றது.



இச்சந்திப்பில் யாழ் மாவட்ட உதைபந்தாட்ட லீக் தலைவர் எஸ்.கிளிபேட் அன்ரனிப்பிள்ளை, செயலாளர் எம்.பிரான்சிஸ், கப்டின் டி.என்.குணசிங்க, பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் செயலாளர் ரீ.வரதராஜன், இலங்கை உதைபந்தாட்ட இளைஞர் அபிவிருத்தி பணிப்பாளர் மகிந்த பால ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகையாளர் சந்திப்பில் ஜேர்மன் பயிற்றுவிப்பாளர் பத்திரிகையாளர்களது கேள்விகளுக்கு பதிலளிக்கையில் பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்.

**கேள்வி:~** யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டில் விளையாட்டுத்துறை பின் தங்கிய நிலையில் உள்ளது. இதை முன்னேற்றுவதற்கு தாங்கள் எடுக்கும் முயற்சிகள் எப்படி?

**பதில்:~** இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பல பகுதிகளில் உள்ள உதைபந்தாட்ட வீரர்களுக்கு நான் பயிற்சியளிதது்ளளேன். முதற்கட்டமாக களுத்துறை, காலி, திருகோணமலை, போன்ற இடங்களில் உதைபந்தாடட பயிற்சிகளை வழங்கியுள்ளேன். இரண்டாம் கட்டமாக தற்போது யாழ்ப்பாணத்தில் பயிற்சி வழங்கியுள்ளேன்.

அத்துடன் நூறு பந்துகளையும் உதைபநதாட்ட வீரர்களுக்கு அனபளிப்பாக வழங்கியுள்ளளேன்.

**கேள்வி:~** உங்களால் வழங்கப்பட்ட இரண்டு நாள் பயிற்சிகள் உதைபந்தாட்ட வீரர்களுககுப் போதுமானதா?

**பதில்:~** நான் வழங்கிய இரு நாள் பயிற்சிகள் உதைபந்தாட்ட வீரர்களை மேம்படுத்துவதற்கு போதாது. ஆனாலும் இது ஒரு ஆரம்பமாகவே உள்ளது.

முதற்கட்டமாக இவ்விரு நாள பயிற்சிகளை வழங்கியுள்ளேன். இரண்டாம் கட்டமாக அடுத்த வருடம் பங்குனி மாதம் மீண்டும் வந்து இவ் உதைபந்தாட்ட வீரர்களுக்கு நீண்டநாள் பயிற்சிகளை வழங்கவுள்ளேன்.

**கேள்வி:~** சர்வதேச ரீதியில் உதைபந்தாட்டப் போட்டிகள் நடாத்துவதற்கேற்ற விளையாட்டு மைதானங்கள் இலங்கையில் குறிப்பாக யாழ்.குடாநாட்டில் இல்லை. இவ்வாறான விளையாட்டு மைதானங்களை இலங்கையில் அமைப்பதற்கு நீங்கள் முயற்சிகள் எடுப்பீர்களா?

**பதில்:~** நிச்சயமாக என்னால் இயன்ற முயற்சிகளை எடுப்பேன். சுவிஸ்லாந்து, ஜெனிவாவில் அமைந்துள்ள சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் (FIFA) தலைமையகத்திற்கு எடுத்துக்கூறி சிபார்சு செய்து விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்கு சகல முயற்சிகளையும் எடுப்பதோடு உதைபந்தாட்டம் வளர்ச்சியடைவதற்கு தேவையான சகல உதவிகளையும் செய்வதற்கு நான் ஆவன செய்வேன்.



**கேள்வி:~** யாழ்மாவட்ட உதைபந்தாட்ட வீரர்கள் சர்வதேச ரீதியில் கால் பதிப்பதற்கு எவ்வாறான முயற்சிகளை எடுக்க வேண்டும்?

**பதில்:~** உதைபந்தாட்ட வீரர்கள் உதைபந்தாட்டம் சம்பந்தமான திறமைகளையும், நுட்பங்களையும் கற்றுக்கொள்வதற்கு மிகவும் ஆர்வமாக உள்ளார்கள். இவ்வீரர்கள் தொடர்ந்து பயிற்சிகளை எடுப்பதன் மூலம் முன்னேற்றம் கண்டு பின்னர் சர்வதேச ரீதியில் கால் பதிக்கலாம்.

மேலும் ஜேர்மன் பயிற்றுவிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில், 25 வருடங்களாக சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தொழில் சார் உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளராக உள்ளேன். இலங்கையை விட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நேபாளம், ஆப்கானிஸ்தான், தலிபான் போன்ற நாடுகளுக்குச் சென்று அங்குள்ள உதைபந்தாட்ட வீரர்களுக்கு பயிற்சிகளை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

செய்திக் கட்டுரை
**ஞா.ஐங்கரன்**

# விவசாய நிலங்களின் உவர்த் தன்மையைப் போக்க மாற்று நடவடிக்கை

(கோண்டாவில்)

கடந்த ஆண்டு இறுதியில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தை அடுத்து பருத்தித்துறை, தம்பசிட்டி, பொலிகண்டி முதலிய பிரதேசங்களின் விவசாய நிலங் களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது.

விவசாய நிலங்களினுள் புகுந்த கடல் நீரினால் மண்ணில் உப்புத்தன்மை அதிகரித்துள்ளது.

திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சிப் பகுதியினர் கடந்த 11 மாதங்களாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து மண்ணை மாதிரிகளை பெற்றுச் செய்த ஆராய்ச்சியின்போதே இத்தகவல் கள் பெறப்பட்டுள்ளன.

மண்ணில் உள்ள நீரின் மின் கடத்து திறன் அதாவது உப்புத் தன்மையானது மண்ணின் இர ண்டு படைகளில் படிகின்ற போது அந்நிலத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாது போகிறது.

மண்ணை உழுது விடுவதன் மூலம் இப்போது ஆரம்பித்துள்ள பருவ மழையின் காரணமாக உப்புத் தன்மை கழுவப்படும். அதோடு மண்ணிலுள்ள உப்புச் செறிவைக் குறைப்பதற்கு மாற்று வழியாக ஜிப்சம் உப்பை பயன்படுத்தலாம் எனவும் ஆலோசனை தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அப்பிரதேசங்களில் மண்ணின் உப்புத்தன்மை குறைந்து வருவதாகவும் இன்னும் இரண்டு அல்லது ஆறு மாதங்களில் உப்பு செறிவு அற்றுப்போக அந் நிலங்களில் முழுமையான பயிர்ச்செய்கையை மேற்கொள்ளலாம் எனவும் திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சிப் பிரிவு பொறுப்பதிகாரி திருமதி எஸ்.விஜயரத்தினம் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று மருதங்கேணி செம்பியன்பற்று பிரதேசங்களில் மண்ணின் உவர்த்தன்மை காரணமாக நெற்செய்கை பாதிப்படைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-36)

## வசமாக மாட்டிய சைக்கிள் திருடன்

(கொழும்புத்துறை)

கடந்த வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் யாழ்.நாச்சிமார் கோவிலில் சைக்கிள் திருடிய நபர் ஒருவர் அப்பகுதி மக்களால் கையும் மெய்யுமாக பிடிபட்டார்!

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, கடந்த வெள்ளிக்கிழமை கோவிலுக்கு வந்திருந்த யுவதி ஒருவரின் துவிச்சக்கர வண்டியை சைக்கிள் திருடன் ஒருவன் பூட்டுடைத்து திருடிக்கொண்டு செல்கையில், அப்பகுதி ஆட்டோ உரிமையாளர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டான். பின்னர் திருடனை கண்டித்துரைத்து 'நான் தான் சைக்கிள் திருடன்' என்ற வாசகம் பொறித்த அட்டையை அவனது கழுத்தில் மாட்டிய பின் அவனைப் பலரும் நையபுடைத்தனர்.

ஜெயரத்தினம் பாலரத்தினம் என்ற சைக்கிள் திருடிய 43 வயது நபர் பின் மேலதிக விசாரணைக்காக சமூக சீர்திருத்தக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

இதேசமயம் நாச்சிமார் கோவிலில் இவ வருடம் 27 சைக்கிள்கள் திருட்டுப் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-51)

## மீண்டும் தலைவரானார்

சமீபத்தில் நடைபெற்ற சாவகச்சேரி ப.நோ.கூ சங்கத் தேர்தலில பழைய தலைவரான ந.பாலசந்திரன் மீண்டும் வெற்றியீட்டியுள்ளார்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவுக்கான தேர்தல் யாழ்மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் குமாரவேலு தலைமையில் நடைபெற்றது. முனனர் உபதலைவர் செ.மகேஸ்வரன 37 வாக்குகளைப் பெற்று மீண்டும் உப தலைவராகத் தெரிவானார். மொத்தமாக 97 போ இததேர்தலில் வாக்களித்தனர். 3 வருடத்திற்கு ஒருமுறை இத்தேர்தல் நடைபெறும.

புதிய நிர்வாகசபை உறுப்பினர்களாக, சு.புலேந்திரலிங்கம், ம.சுப்பையா, உ.பரமநாதன், சோ.கோகுலன், கி.சுதர்சன் ஆகியோர் தெரிவாகினர். (து-108)

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி

நடைபெற்று முடிந்த தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் வடடுக் கோட்டை மத்திய கல்லூரி மாணவர்கள் 4பேர் சித்தியடைந்துள்ளனர்.

ம.பிரபு-142, வி.ஸ்ரீசுபாங்கி-141, சி.தாரகா-133, ஸ்ரீ.சொரூபிகா-131 ஆகிய மாணவர்களே இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாவர். (ற)

## கறவைப் பசுக்களுக்கு சத்துணவு

கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பண்ணைகளில் வளர்க்கப்படும் கறவைப் பசுக்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

செயற்கை முறை சினைப்படுத்தல்மூலம் மேற்படி வைத்திய அதிகாரி பிரிவில் கன்று ஈன்ற பசுக்களுக்கே இவ்வாறு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

தமது பிரிவுக்குட்பட்ட 151 பசுக்களுக்கு சத்துணவை வழங்க இருப்பதாகவும், சுமார் பத்திற்கும் மேற்பட்ட பசுக்களுக்கு தற்போது சத்துணவு வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனையோரை விரைவில் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் வைத்திய அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற-74)

## வீதி புனரமைப்பு

சுனாமியினால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல முகாமில் வாழும் வடமராட்சி கிழக்கு ஆழியவளை மக்களுக்கான நிரந்தர குடியேற்றத்திட்ட வீதி புனரமைப்புக்கு யாழ். அரச அதிபரினால் 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வீதி புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகியுள்ளதாகவும் இதனை குறுகிய நாட்களுக்குள் முடிக்கும் எனவும் மருதங்கேணி பிரதேச சபை செயலாளா பொன தங்கராசா தெரிவித்தார். (து-23)

# சச்சின் 27

## மீள் பார்வை

என். சொக்கன்

## ஒரு புயலின் கதை

இங்கிலாந்தில் இருந்து திரும்பிய இந்திய அணி, உடனடியாக இலங்கையுடன் ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடியது. சண்டிகரில் நடைபெற்ற இந்த போட்டி தான், இந்தியாவில் சச்சின் விளையாடிய முதல் சர்வதேசப் போட்டி!

பாகிஸ்தான், நியூஸிலாந்து, இங்கிலாந்து என்று ஊர் ஊராகச் சென்று பெயர் வாங்கி வந்திருக்கும் இந்தியாவின் இளம் நாயகனின் ஆட்டத்தை முதல் முறையாகப் பார்க்கிற ஆவலோடு பஞ்சாப் கிரிக்கெற் ரசிகர்கள் சண்டிகர் மைதானத்தில் வந்து குவிந்தனர். ஆனால் அந்தப் போட்டியில் சச்சின் 11 ரன்களில் ஆட்டமிழந்தான். ஆயினும், அந்தப் போட்டியில் ஒரு இன்னிங்ஸ், எட்டு ரன்கள் வித்தியா சத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது. டெஸ்ட் தான் முதல் முறையாக தனதுஅணி ஒரு போட்டியில் வெல்வதை கண் குளிரப் பார்த் சச்சின்!



அதன பின் சில மாதங்களுக்குத் தொடர்ச்சியாக ஒரு நாள் போட்டிகள் தான். 1990 டிசம்பரில், இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து வந்த இலங்கைக்கு எதிராக மூன்று போட்டிகள், அதே மாத இறுதியில் ஆசியக் கோப்பை, தொடர்ந்து ஷார்ஜாவில் வில்ஸ் கோப்பை, அதன் பின் இந்தியா திரும்பி, தென் ஆபிரிக்க அணியோடு மூன்று ஒரு நாள் போட்டிகள், இத்தனைக்கும் நடுவே துலீப், ரஞ்சி இத்யாதி உள்ளூர்ப் போட்டிகளும் சச்சினுக்கு மூச்சு விட கூட நேரமில்லாத படி கிரிக் கெற் ஆட்டங்கள் நெருக்கின.

சச்சினின் முக்கிய மற்றும் முதல் விருப்பம் டெஸ்ட் போட்டிகள் தான் என்றாலும், இப்போது ஒரு நாள் போட்டிகளில் நிறைய விளையாடுவது அவனுக்குப் பிடித்திருந்தது. இதற்கு முக்கியமான காரணம் - பாகிஸ்தானில் சச்சின் அறிமுகமானது முதல் இன்று வரை பத்து டெஸ்ட் போட்டிகளில் விளையாடி, உலகின் கவனத்தை வாங்கியாகிவிட்டது. ஆனால் ஒரு நாள் போட்டிகளைப் பொறுத்தவரை, இதுவரை அவன் ஏதும் விசேஷமாகச் செய்திருக்கவில்லை. ஆகவே அடிக்கடி அவனை அணியைவிட்டு நீக்குவதும், மீண்டும் சேர்த்துக்கொள்வதுமாக பந்தாடிக் கொண்டிருந்தது அணி நிர்வாகம். ஒரு நாள் போட்டிகளிலும் தனது தனித்திறமையை நிரூபித்து, அணியில் நிரந்தரமாக இடம் பிடிக்க விரும்பினான் சச்சின். அதற்கு இந்த ஒரு நாள் தொடர் கள் மிகவும் உதவிகரமாக இருந்தன!

இலங்கை அணிக்கு எதிரான ஒரு நாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் புனேயில் நடைபெற்றது. இப் போட்டியில் சச்சின் 53 ரன்கள் குவித்தான். ஒரு நாள் போட்டிகளில் அவனது முதல் அரைசதம்! முதல் 'ஆட்ட நாயகன்' விருதும் கூட! அடுத்து நடைபெற்ற ஆசியக் கோப்பை போட்டியின் இறுதி ஆட்டத்தில், இலங்கைக்கு எதி ராக மீண்டும் 53 ரன்கள் எடுத்தான் சச்சின்!

ஷார்ஜா பயணத்துக்கு இன்னும் நாள்கள் இருந்ததால், அந்த இடைவெளியில் சச்சின் சில உள்ளூர்ப் போட்டிகளில் பங்கேற்றான். கிழக்கு மண்டல அணிக்கெதிரான துலீப் கோப்பைப் போட் டியில் 159 ரன்கள் எடுத்த போது இன்னுமொரு புதிய சாதனை அவனது பட்டியலில் சேர்ந்து கொண்டது. இந்தியாவின் முக்கிய உள்ளூர் போட்டிகளான ரஞ்சிக் கோப்பை, இரானி கோப்பை, துலீப் கோப்பை மூன்றிலும் தான் விளையாடிய முதல் போட்டியிலேயே சதமடித்த பெருமை, இன்று வரை சச்சினுக்கு மட்டுமே உரியதாக இருக்கிறது!

1991 அக்டோபர் மாதம், ஷார்ஜாவில் பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடிய சச்சின், 49 ரன்கள் குவித்தான். அந்த அற்புதமான மைதானத்தில், வாஸிம் அக்ரம் குழுவினரின் பந்துகளை சகட்டுமேனிக்கு சிக்ஸர்களாக விளாசித்தள்ளி யிதை இந்தியா மொத்தமும் நேரடி ஒளிபரப்பாகப் பார்த்துப் பரவசமுற்றது!



இடைவெளி இல்லாத ஒரு நாள் போட்டிகளுக்குப் பின், இந்திய அணிக்கு நிஜமான "டெஸ்ட்" வந்தது. ஆஸ்திரேலிய சுற்றுப்பயணம். வலுவான ஆஸ்திரேலிய அணி என்னும் சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திக்கும் போராட்டம்!

கடுமையான அக்னிப் பரீட்சை தான். ஆனால் அதன் முடிவில் நமக்குக்கிடைத்தது புடம்போடப்பட்ட ஒரு இளைய தங்கம்!

### பொறுப்பான இரு சதங்கள்

அஸாருதீன் தலைமையிலான இந்திய அணி 1991இல் ஆஸ்திரேலியாவுக்குப் பயணமானது. ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக ஐந்து டெஸ்ட் போட்டிகளும், இந்தியா- ஆஸ்திரேலியா- மேற்கிந்தியத் தீவுகள் பங்கேற்கும் ஒரு நாள் போட்டித் தொடரும் ஏற்பாடாகி இருந்தது.

1992இல் ஐந்தாவது கிரிக்கெற் உலகக் கோப்பைப் போட்டிகள் ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தில் நடைபெற இருந்ததால் இந்தத் தொடர் அதற்கான பயிற்சியாக பார்க்கப்பட்டது.!

சச்சினுக்கு அது தான் முதல் ஆஸ்திரேலியப் பயணம். அங்கு இருக்கும் மைதானங்களின் தன்மையையும் அதிவேகப் பந்துவீச்சு, எதிர் பாராத எழும்புதல்கள் (Bounce) ஆகியவற்றைப் பற்றியும், கடுமையான குளிரைப் பொறுத் துக் கொண்டு ஆடவேண்டியிருப்பதன் சிரமங்களையும் அவன் நிறையவே கோள்விப் பட்டிருந்தான். ஆனாலும், கடினமான சூழ்நிலைகளைத் தேடிப் பிடித்துச் சண்டையிடுகிற அவனது இயல்பான ஆர்வம் அவனை நம்பிக்கையோடு வைத்திருந்தது. சவா லான ஆஸ்திரேலிய ஆடுகளங்களைச் சந்திக்க, மனத்தளவில் அவன் தயாராகி இருந்தான்.

(தொடரும்)

## ஜெயரட்ணத்தின் நிலை என்ன?

(கொழும்பு)

கல்கிசைப் பொலிஸ் பிரிவில் பயங்கரவாதப் தடுப்புப் பிரிவின் இரண்டாவது அதிகாரியாகப் பணியாற்றிய ரி. ஜெயரட்ணம் கடத்தப்பட்டு ஆறு மாதங்கள் கடந்துள்ள போதிலும் அவரைப் பற்றிய தகவல்கள் இது வரை கண்டறியப்படவில்லை.

கடத்தப்பட்ட ஜெயரட்ணம் கல்கிசை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி மொகமட் நீலாப்தீனுக்கு அடுத்த நிலை அதிகாரியாகக் கடமையாற்றி வந்தார். பின்னர் அங்கிருந்து வனாத்தவில்லுப் பிரதேசத்திற்குப் இடமாற்றம் பெற்றுச் சென்று மீண்டும் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றி வந்தார்.

இந்நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம்திகதி அதிகாலை கல்கிசை உணவு விடுதிக்கு அருகில் ஜெயரட்ணம் கடத்தப்பட்டார்.

ஜெயரட்ணம் கடத்தலையடுத்து கல்கிசை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி நீலாப்தீன் நாட்டை விட்டு வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

## ஆறு தசாப்த காலமாக ஐ.நா சபை ஆற்றிய பணி மகத்தானது-அனுரா

(கொழும்பு)

கடந்த ஆறு தசாப்த காலமாக பல முன்னணி மாற்றங்கள் மூலம் மனித சமுதாயத்தை ஐக்கிய நாடுகள் சபை வழி நடத்திச் சென்றுள்ளது என்று அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் அதன் 60ஆவது ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடும் முகமாக இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

டிசம்பர் மாதம் 14ஆம் திகதி யுடன் ஐக்கிய நாடுகள் சபைக்கும் இலங்கைக்கும் இடையே நிலவிய இரு தரப்பு உறவுகளின் 50 ஆண்டுகள் பூர்த்தியடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு மேலதிக நிதி மற்றும் தொழில் நுட்ப உதவிகளை வழங்கியதில் ஐக்கிய நாடுகள் சபை முக்கிய பங்காற்றியுள்ளது என்று அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இலங்கையில் சுனாமிக்கு பின்னரான அவசர நிவாரண உதவிகளில் ஐக்கிய நாடுகள் சபை ஆற்றிய பங்கு குறித்தும் அவர் பாராட்டு தெரிவித்துள்ளார். (து-



கரவெட்டிப்பிரதேச செயலகமும் வடமராட்சி லயன்ஸ் கழகமும் இணைந்து முதியோர் தினத்தை ஒட்டி நடாத்திய முதியோர் மருத்துவமுகாமில் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எஸ். சிவகுமார் பெண்மணி ஒருவருக்கு இலவச மூக்குக் கண்ணாடியை அணிவிக்கிறார். (படம்:- பருத்தித்துறை நிருபர்)

## இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் மஹிந்தவின் சிந்தனையில் இல்லை


(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடியதான எந்தவிதமான ஆக்கபூர்வமான விடயங்களும் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெறவில்லை என்று தமிழத்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் எந்த வகையிலும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யப்போவதில்லை என்று தெரிவித்த அவர், தமிழ் மக்களை தேசிய இனமாகக் கூட மஹிந்த மதிக்கவில்லை எனவும் விசனம் தெரிவித்துள்ளார். (து-9)



புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெற்ற வாணிவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தீவக வலய அழகியற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஸ்ரீ. இராமச்சந்திரன் மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் பாடசாலை அதிபர் ஆசிரியமணி ந. இராசதுரை நிற்பதையும், அந்நிகழ்வில் நடைபெற்ற கலை நிகழ்வுக் காட்சி ஒன்றையும் படங் களில் காணலாம். (படங்கள்:-புங்குடுதீவு செய்தியாளர்)



நம்முள் எழுகின்ற புத்தெழுச்சிதான் வரலாற்றால் நாம் அடைகின்ற தலைசிறந்த பயன். - கெதே-

வலம்புரி

## மறியல் போராட்டம் செய்வதுதான் பட்டதாரிகளுக்கு தெரிந்த வழியா ?

பயிலுநர் அல்லாத பட்டதாரிகளின் மறியல் போராட்டம் யாழ்.கல்வி வலயம் முன்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனால் யாழ்.கல்வி வலயமும், அதனோடு இணைந்துள்ள மேலதிக மாகாணக்கல்வி பணிமனையும் செயலிழந்து போயுள்ளன.

பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான போட்டிப்பரீட்சையில் தோற்றியும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நேர்முகப்பரீட்சையில் பிரசன்னமாகியும் தமக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படவில்லை என்பதே மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளின் ஆதங்கம்.

பல்கலைக்கழகங்களில் மூன்று நான்கு வருடங்கள் பொதுமக்களின் வரிப்பணத்தை செலவு செய்து படித்த பட்டதாரிகள் தமக்கு அரச வேலை வழங்குமாறு கோரிக்கை முன்வைப்பது நியாயமானதே.

இவ்விதம் நியாயம் கூறுகின்றபோது, பட்டதாரிகள் தனியார் துறையில் அல்லது தனித்துவமான துறைகளில் ஈடுபடக்கூடாதா? என்ற கேள்வி பொதுமக்கள் பக்கம் ஒலிப்பதும் கேட்கவே செய்கின்றது.

அவ்வாறான கேள்விகள் ஏற்பட்டால் அதற்கு பட்டதாரிகள் காரணமல்ல- மாறாக அவர்களுக்கு பட்டம் வழங்கிய பல்கலைக் கழகங்களே காரணம் எனலாம்.

பல்கலைக்கழகங்கள் தாம் வெளியீடு செய்கின்ற பட்டதாரிகளை வெறும் அரசசேவையாளர்களாகவே இருக்கும் தகுதி, தரத்துடன் மட்டுமே உருவாக்குகின்றனர்.

இதனால் அவர்கள் தற்துணிவோடு பங்குடமை, கம்பனி என்ற வர்த்தகத்துறைக்குள்ளோ அன்றி விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் தொழிநுட்ப ஆலோசனைகள் என்ற துறைகளிலோ தம்மை ஈடுபடுத்த முடியாமல் திணறுகின்றனர்.

ஒரு பல்கலைக்கழகம் என்பது பரீட்சை நடத்துவது, பட்டம் வழங்குவது என்ற குறுகிய வட்டத்திற்குள் நிற்குமாயின் அது இந்த நாட்டிற்கும் மக்களுக்கும் செய்யும் பெரும் துரோகத்தனமாகும்.

இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்கள் பல்துறைசார் நிபுணத்துவம் உடைய பட்டதாரிகளை என்று உருவாக்கின்றதோ அன்றுதான் பட்டதார்ரிகள் அரசசேவைக்கு கையேந்தும் நிலைமை மாற்றமடையும்.

இந்த உண்மைக்கு அப்பால் யாழ்ப்பாணத்தில்வேலையற்ற பட்டதாரிகள் நடாத்தும் 'மறியல் கலாசாரம' தொடர்ந்து செல்வது மிகவும் துன்பகரமானதாகும்.

தமக்கு வேலை தரவேண்டுமென்பதற்காக கல்வித்திணைக்கழகங்களை ஸ்தம்பிதமடையச்செய்வது வருங்கால மாணவர்களுக்கு அவர்கள் செய்யும் கயமைத்தனமாகும்.

தாங்கள் கற்கும் காலத்தில்-பட்டம் பெறும் காலத்தில் அமைதி நிலவவேண்டுமென விரும்பிய பட்டதாரிகள் இப்போது தமக்கு வேலை கிடைக்கவில்லை என்பதற்காக கல்வித்திணைக்களத்தை ஸ்தம்பிக்க வைப்பது எவ்வகையிலும் நியாயமாகாது.

அவர்கள் தமக்கான அரச வேலைக்காக நடாத்தும் 'மறியல்'போராட்டத்தை மாற்றி மக்கள் பாதிப்படையாத வகையில் தமது போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும்.

# இரண்டு பிரதான கட்சிகளும் இணைவதன் மூலமே நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க முடியும்

### அமைச்சர் டியூ குணசேகர

(கொழும்பு)

தற்போதுள்ள தேர்தல் முறைமையின் படி நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை இரத்துச் செய்யக் கூடிய நிலை இல்லையென அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

தறபோதுள்ள தேர்தல் முறைமையின் கீழ் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தினைப் பெறமுடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை இல்லாதொழிகக வேண்டுமானால் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் இணைவதன் மூலம் மட்டுமே அது சாத்தியமாகும் என குருநாகலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை இரத்துச் செய்வதே 1994இல் எமது கோஷமாக இருந்தது எனினும் 12 வருடங்கள் கழிந்த நிலையிலும் அது முடியாமல் போயுள்ளது. இதற்கு இந்த அரசியல் அமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள தேர்தல் முறைமையே காரணமாகும். இந்தத் தேர்தல முறைமையின் கீழ் ஒருபோதும் அதிகாரத்துக்கு வருகின்ற கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலததினைப் பெறாது.

எதிர்க்கட்சியும், ஆளும் கட்சியும் இணைந்து அரசியல் அமைப்பினை மாற்றினாலே தவிர ஒருபோதும் இதனை மாற்ற முடியாது எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

# ஒஸ்லோ பிரகடனம் தொடர்பில் மஹிந்தவின் நிலைப்பாடு என்ன?

## -திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி

(கொழும்பு)

ஒஸலோ பிரகடனத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

ஒஸ்லோப் பிரகடனம் தொடர்பாக பிரதமர் மஹிந்தவின நிலைப்பாடு என்ன? அதனை அவர் ஏற்றுககொள்கின்றாரா? இல்லையா? என்பதை பகிரங்கப்படுத்த வேண்டும எனறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

மஹிந்தவின் சிந்தனையின் மூலம் நாட்டின் பிரச்சினைக்கோ, மக்களின் பிரச்சினைகளுக்கோ தீர்வு காண முடியாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார்.

நாட்டினைத் துண்டாடாமல் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமாயின் சர்வதேச நாடுகளின் இணக்கத்துடன் ஏற்படுத்தப்பட்ட ஒஸ்லோ பிரகடனத்தின் பிரசாரம் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படவேண்டும்.

இதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் அதன் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், ஒஸ்லோ பிரகடனத்தின் பிரகாரம் சமாதானப் பேச்சுவார்த்தையினை முன்னெடுக்க வேண்டுமென்று குமுறுகின்ற ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல வீரவன்ஸ, சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக முன் வைத்துள்ள மாற்று யோசனைகள் என்ன?

சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக பிரதமர் மஹிநதவின் நிலைப்பாடு என்ன? அவர் ஒஸ்லோப் பிரகடனத்தினை ஏற்றுக் கொள்கின்றாரா? இல்லையா? என்பது தொடர்பாக உடனடியாகத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க கேட்டுள்ளார். (ந-4)

# தமிழீழத் தேசியக் கொடி ஐ.நா. சபையில் பறக்கும்

### கஜேந்திரன் எம்.பி

(கொழும்பு)

தமிழீழத்தில் தற்போதுள்ள நடைமுறை அரசின் கொடி விரைவில் ஐக்கிய நாடுகள் சபையில் பறக்கும் என்று பெலஜியத்தில் கொட்டும் மழையில் நடைபெற்ற தமிழர் வாழ்வுரிமை முழக்கப் போராட்டத்தில் பங்கேற்றுப் பேசிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் நம்பிக்கை தெரிவித்தா.

அவர் மேலும் கூறுகையில், உங்களைப் பார்க்கும் போது எங்களுடைய மண் எங்களுடைய கைகளிலே வந்து சேரும என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. இந்த உணர்ச்சிகளைக் கேட்டறியும் தேசியத் தலைவர் மகிழ்ச்சியடைவார் என்பதில் சந்தேகம் இல்லை.

வன்னிக்காட்டில் இருந்தாலும் புலம் பெயர் தமிழ் உறவுகள் எத்தகையை உணர்வோடு இருக்கிறார் என்பதை தேசியத்தலைவர் அறிவார்.

தேசியத் தலைவர்தான் நம்மைச் சர்வதேச அளவில் தலை நிமிர வாழ வைத்திருப்பதாக நம் மக்கள் எண்ணுகிறார்கள். ஆனால் தன்னுடைய மக்களால்த்தான் தமிழாகள் இன்று சர்வதேசத்திலேயே தலை நிமிர்ந்து நிற்க முடிந்திருக்கிறது என்று தேசியத் தலைவர் கருதுகிறார்.

அதனை நிரூபிக்கும் வகையில் உணர்வு பூர்வமாக பெரும் எண்ணிக்கையில் இங்கே கலந்துகொண்டுள்ளீர்கள். இந்தக் கூட்டத்தைப்பார்க்கும் ஐரோப்பிய சமூகததின் வெள்ளைக்காரர்கள் தமிழர்களது நியாயப்பாடுகளைப் புரிநது கொள்வார்கள் என்ற திடமான நம்பிக்கை எமக்கு உண்டு.

தமிழ்த் தேசியத்தின் மீதும் தமிழழ தேசிய தலைவர் மீதும் கொண்டிருக்கும் பற்றும் பாசமும் வெறியும் இப்போது ஐரோப்பியர்களுக்குப் புரியும். எதிர்வரும் காலங்களில் ஐரோப்பிய ஒன்றியம் தனது முடிவை மறுபரிசீலனை செய்யும் சூழ்நிலை உருவாகும். தன்னிகரில்லாத தலைவன் காலத்திலேயே தமிழர் விடுதலைக்கான தர்வை எட்டவேண்டும். இலங்கைத் தீவில் ஜனாதபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தல் தீர்வை தருமா என்ற அவா நம் மக்களிடத்தில் உள்ளது. தென்னிலங்கையில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் செய்யப் போவதை தீர்மானிப்பது நாம் தான். ஆதலால் இராணுவம் மற்றும் அரசியல் ரீதியாக தலைவரின் கரங்களை வலுப்படுத்துவோம். நமது உரிமைய மீட்டெடுப்போம்.தேசியத் தலைவர் தற்போது 50 அகவையைக் கடந்துள்ளார். 14ஆவது அகவையில் விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கி இன்று தமிழனுக்கு ஒரு தனியான நிர்வாகக்கட்டமைப்பையும் சகல வளத்தையும் கொணடதாக உருவாக்கியுள்ளார்.

இதை மீட்பது இலகுவான காரியம். தாயகத்திலே உங்களுடைய உறவுகள் திணிக்கப்படும்.போருக்கும் தயாராக எல்லைப்படை துணைப்படையாக அணிவகுத்து பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

அம்பாறை முதல் யாழ்ப்பாணம் வரை இராணுவ ஆக்கிரமிப்புப்பிரதேசங்களில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குச் சென்று பயிற்சிகளை பெற்றுவருகின்றனர். தலைவரின் கட்டளையை நிறைவேற்ற தாயக மக்கள் தயாராக இருக்கிறார்கள். எங்கள மீது போர் திணிக்கப்படும்போது உரிய ஆயுதங்களையும் வளங்களையும் வழங்கவேண்டிய கடப்பாடு உங்களுக்கு உண்டு.

இனியொரு யுத்தம் வந்தால் சிங்களப்படை வெளியேற்றப்பட்டு ஓரிரு வாரங்களில் தமிழ்ர் மண புனித மண்ணாகி விடும. நீங்கள் நம்பிக்கையோடும் உறுதியோடும் செயற்படவேண்டும். உங்களின் பங்களிப்பு இன்னும் சிறிது காலத்திற்குத்தான்.

தமிழீழத்திலே தற்போதுள்ள நடைமுறை அரசின் தேசிய கொடியை ஐக்கிய நாடுகள் சபையில் விரைவில் பறக்கச் செய்வோம் என்றார். (ச-4)

## வெள்ளவத்தையில் டெட்டனேட்டர்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

வெள்ளவத்தையில் தனியார் நிறுவனத்தின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டபிள் கெப் வாகனமொன்றில் இருந்து 4 சக்தி வாய்ந்த டெட்டனேட்டர்களையும் வயர்களையும் கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இந்த டபிள் கெப் வாகனம் நிறுவனத்தின் பொறியியலாளருக்குச் சொந்தமானது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரின் விசேடப் பிரிவிற்குக் கிடைத்த அனாமதேய தொலைபேசி அழைப்பையடுத்து இவ்வாகனம் சோதனையிடப்பட்டு டெட்டனேட்டர்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாகனம் நிறுத்தப்பட்டிருந்த வீதியினூடாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பயணிக்க இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. முக்கியப் பிரமுகர்கள் யாரையும் இலக்குவைத்து இந்த டெட்டனேட்டர்கள் இங்கு கொண்டு வரப்பட்டனவா? என்பது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது அந்த நிறுவனத்தின் பொறியியலாளர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளார். (ந-4)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



எல்லாவற்றையும் இயக்குபவர் கடவுள் ஒருவரே. அவரைத்தவிர வேறுயாரும் இல்லை. நிலத்தையும் நீரையும் பிரபஞ்சத்தையும் வியாபித்திருக்கும் அவருக்கு நான் என்னையே தருகிறேன். உலகங்கள் அனைத்தும் அழிந்த போதிலும் அவரால் படைக்கப்பட்ட யாவும் அழந்த பின்னும் அவர் அழியமாட்டார். அவரே எல்லாவற்றுக்கும் தலைவர். தாம் விரும்பியதை அவர் செய்வார்.

சுவாமி விவேகானந்தர்

# யாழ்.கல்வி வலயம் முன்பாக பட்டதாரிகள் நேற்றும் மறியல்



(யாழ்ப்பாணம்)

பயிலுநர் அல்லாத பட்டதாரிகள் நேற்று யாழ்.கல்வி வலயம் முன்பாக முழுநேர மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இப்போராட்டத்தில் 300க்கு மேற்பட்ட பட்டதாரிகள் பதாகைகளை தாங்கிய வண்ணம் ஈடுபட்டனர்.

வடக்கு கிழக்கு மாகாண சபையின் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் நடாத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் தோற்றிய மாணவர்களிலும் தமக்கு அரச துறையில் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. இதனால் தமக்கு அரசதுறைகளில் நிரந்தர நியமனம் வழங்கும்படி கோரியே மறியல் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

தமது இக் கோரிக்கையை ஏற்று தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும் வரை தாம் தொடர்ந்து மறியல்போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் இனிமேல் தாம் எந்தவொரு கால அவகாசத்தையும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

பயிலுநர் அல்லாத பட்டதாரிகள் சங்கத் தலைவர் உட்பட பட்டதாரிகள் சிலர் நேற்று யாழ்.அரச அதிபர் கே.கணேஷையும் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர். பட்டதாரிகளின் மறியல் போராட்டத்தினால் யாழ்.கல்வி வலயம் நேற்றும் செயலிழந்து காணப்பட்டது.

(ந-19)

## வாக்காளர் அட்டைகள் நாளை முதல் விநியோகம்

(கொழுமபு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் நாளை தொடக்கம் எதிர்வரும் 9ஆம் திகதி வரை விநியோகிக்கப்படவுள்ளதாக தபால்மா அதிபர் சேவின் சேனாதி தெரிவித்தார்.

வாக்காளர் அட்டை விநியோகம் தேர்தல் கண்காணிப்பாளர்கள், தபால் உத்தியோகத்தர்கள் உட்பட சிரேஷ்ட அதிகாரிகளின் மேற்பார்வையில் இடம் பெறும்.

நவம்பர் மாதம் 9ஆம் திகதி வரை வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் 10ஆம் திகதி தொடக்கம் அருகில் உள்ள தபால் நிலையங்களுக்குச் சென்று பெற்றுக்கொள்ள முடியும்.அதேவேளை வாக்காளர் அட்டைகள் நேற்று தொடக்கம் தபால் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தபால் மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-8)

## சிற்றூர்திகள் சேவை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் அதிகாலை கைதடியில் மினிபஸ்ஸும் ஆட்டோவும் மோதியதால் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த இராமலிங்கம் சதீஸ்சிற்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக நேற்று பகல் 1மணியில் இருந்து முகமாலை -யாழ்ப்பாணத்திற்கு இடையிலான சிற்றூர்திகள் சேவை நிறுத்தப்பட்டிருந்தது. (கு)

## தீயணைப்பு வாகனம் சேவைக்கு தயார் நிலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையில் மிக நீண்டகாலமாக இயங்கி வந்த தீயணைப்பு வாகனத்தில் ஏற்பட்ட கோளாறை அடுத்து அதில் அவசர திருத்த வேலைகளைச் செய்வதற்காக சிறிது காலம் இடைநிறுத்தப்பட்டிருந்த தீயணைப்புச்சேவை தற்போது மேற்படி வாகனம் பூரணமாக திருத்தம் செய்யப்பட்டுள்ளதால் தீயணைப்பு மேற்கொள்வதற்கு தயாராக உள்ளதாக யாழ்.மாநகர ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம் அறிவித்துள்ளார். (ற)

## ஒற்றை லைற் உடன்...

அவர் உயிரிழந்தார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற கொடிகாமம் பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைத்தனர். பிரேத பரிசோதனையின் பின் சடலம் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் சம்பந்தப்பட்ட உழவு இயந்திரம் தப்பியோடிய போதிலும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் உழவு இயந்திரத்தை கைப்பற்றி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத் துள்ளனர். (ந-108)

## பட்டதாரிப் பயிலுநர்களுக்கு ஒக்.இறுதிக்குள் நிரந்தர நியமனம்

அரச துறைகளில் பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட நியமனங்கள் சட்டபூர்வமானவை அல்ல என்ற குற்றச்சாட்டில் எந்தவிதமான அடிப்படை உண்மையும் இல்லை.

இவ்வாறு பிரதி நிதிஅமைச்சர் ரஞ்சித் சியமலாப்பிட்டிய தெரிவித்துள்ளார். அரச நடைமுறைகளுக்கு ஏற்பவே பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அரச சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட 42 ஆயிரம் பட்டதாரிகளில் எஞ்சியுள்ள அனைவரும் இம் மாத இறுதிக்குள் நிரந்தர சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்றும் பிரதி நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாடசாலைகளில் இருந்து வெளியேறுவோருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கும் நீண்ட காலத்திட்டம் ஒன்று நீடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் பிரதிநிதியமைச்சர் தெரிவித்துள்ளார். (ந19)

## ஆளும் கூட்டணிக் கட்சிகளுடன் ஜனாதிபதி முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுக்குமிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் சமகால அரசியல் நிலைமைகள் ,ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மகிந்தவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பிலான விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளன.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் இடையில் சுதந்திரக்கட்சியின் கொள்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் ஏற்பட்டுள்ள பாரிய முரண்பாடுகளுக்கு மத்தியில் இச்சந்திப்பு இடம் பெற்றுள்ளமை தென்னிலங்கை அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

இக் கூட்டத்திற்கு பிரதமர் மகிந்த வருகை தந்த போதிலும் சந்திப்பு ஆரம்பமாவதற்கு முன்னரே பிரசாரக்கூட்டமொன்றுக்காக அவர் சென்று விட்டார்.

இதேவேளை சந்திப்பில் முடிவில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை கண்டறிந்து நீக்குவதற்கு சகலரும் உறுதியாக உழைப்பதென்றும் மகிந்தவின் வெற்றிக்காக ஒன்றிணைந்து செயற்படுவதென்றும் கொள்கையளவில் உடன்பாடு காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-8)

## பிரதமர் பதவி கிடைப்பதை...

கடந்த சில வாரங்களாக இவ்வாறான சதிமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தமைக்கான நம்பத்தகுந்த தகவல்கள் எனக்கு கிடைத்துள்ளன.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் நான் ஜனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவினை ஆதரிக்கவில்லை என்றும் இதனாலேயே கட்சியின் பிரதமர் பதவிக்கு தன்னை நிறுத்த முடியாதென்றும் பிரசாரம் செய்துவருகின்னர்.

பிரதமர் பதவிக்கு போட்டியிடுவதை தடுக்கும் சதிமுயற்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சதிமுயற்சி தொடர்பாக மிகவிரைவில் கூட்டம் ஒன்றை கூட்டி அம்பலப்படுத்தவுள்ளதாகவும் பிரதமர் மகிந்தவுக் கான ஆதரவு தொடர்பான ஒரு அறிக்கையொன்றை தான் வெளியிடவுள்ளதாகவும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அநுரா ,

மகிந்தவை ஜனாதிபதியாக தெரிவு செய்யும் பொறுப்பு மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளதென்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ந-8)

## 13 இலட்சம் ரூபா கொள்ளை

(கொழும்பு)

திஸ்ஸமகரகம பகுதியில் உள்ள அரசாங்க அலுவலகத்திற்கு சம்பளம் வழங்கவென கொண்டு செல்லப்பட்ட 13 இலட்சம் ரூபா இனந்தெரியாத குழுவினால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் குறித்த அரச அலுவலகத்திற்கு சம்பளம் வழங்குவதற்காக வங்கியில் எடுக்கப்பட்ட பணத்தை கொண்டு சென்ற போது மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று பேர் கொண்ட குழுவொன்று அதிகாரிகளை அச்சுறுத்தி விட்டு பணத்தை கொள்ளையடித்துள்ளது.

இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-8)

## பிரதமர் பதவியில்...

பிரிவினைவாதிகளுக்கு பாதை அமைத்து கொடுக்கும் ரணில் விக்கிரமசிங்காவை தோற்கடிப் பார்கள்.

கடந்தகாலங்களில் நீங்கள் செய்த தவறினால் கட்சியில் பல வாய்ப்புக்களை இழந்திருந்தீர்கள். எதிர்காலத்தில் இதுபோல் எதுவும் நடைபெறாமல் இருக்க வேண்டுமானால் கட்சியின் பாதையில் பொறுப்புணர்ந்து செல்ல வேண்டும் எனவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-4)

## எழுத்துப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

நாளை வியாழக்கிழமை மு.ப.9.30, 11.00 மணி ஆகிய நேரங்களில் நடைபெறவிருந்த புதிய சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்துப்பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்றைய தினம் நடைபெறமாட்டாது.

இப் பரீட்சையானது எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி திங்கட்கிழமை அ[illegible]களுக்கு வழங்கப்பட்ட நேரஒழுங்கில் நடைபெறுமென யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் அறிவித்துள்ளார். (ற)

மனோகரா யாழ்.
கார்த்திகன் , லஷ்மிராய், வடிவேல் நடித்த
குண்டக்க மண்டக்க...
கா.நே: 10.30, 02.30, 6.30, 9.30 (பு.நே)
30.10.2005 முதல்
யாழ்.நகரில் முதன் முறையாக DIGITAL dts SOUND ஒலி நயத்துடன்
இளைய தளபதி விஜய் வெடிக்கும்
சிவகாசி
(சில தினங்கள் மட்டும் காலை 8.30 காட்சி காண்பிக்கப்படும்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
ஆர்ஜா, சோனியாஅகர்வால் நடித்த
ஒரு கல்லூரியின் கதை
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30(பு.நே)
தீபாவளி வெளியீடு
தனுஷ் நடித்த
அது ஒரு கனாக்காலம்

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார் (இரு வேடங்களில்)
நமீதா . வடிவேல் நடித்த
சாணக்கியா
கா.நே: 11.00, 02.45, 6.00, (பு.நே)

சித்தாலேப வைத்தியர் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுகிறார்
போரை முடிவிற்கு கொண்டுவருவார் விக்டர் ஹெட்டி கொட சின்னம் கோப்பை

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.